திருமலை திருப்பதியாத்திரை

ஸ்ரீ

ஸ்ரீலக்ஷ்மீ வேங்கடேசாயநம:

ஸ்ரீயை ஸ்ரீபத்மாவதியைநம:

# ஸ்ரீதிருப்பதி வேங்கடாசலபதிக்ஷேத்திர ஸ்தலபுராண மஹாத்மிய வைபவம்.







ஸ்ரீவேங்கடேசப்பெருமாள்　　ஸ்ரீஅலர்மங்கையம்மன்.

இது

ஸ்ரீ வராஹ, பத்ம, பவிஷ்யோத்தர முதலிய அஷ்டாதச
புராணங்களைக்கொண்டு ஸ்ரீ திருமலையில்
ஸ்ரீவேங்கடாசலபதி ஸ்ரீவைகுண்டத்தில் நின்றும்
எழுந்தருளிய பிரபாவமும் ஸ்ரீலக்ஷ்மீ அலர்மங்கையாய்
திருச்சானூரில் எழுந்தருளிய பிரபாவமும் மஹா
தீர்த்த பிரபாவங்களும் அடங்கியது.

இது

திருச்சானூர் கெ. சுந்தராசார்லு பிரதர்ஸ்

அவர்களால்

திருப்பதி ஸ்ரீவியாஸ முத்திராக்ஷர சாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

1927.

[0—4—0.

istered Copy Right.

NOV 1927

# அட்டவணை.


| | | | பேஜ் |
|---|---|---|---|
| ஸ்ரீ வேங்கடேஸ்வர ஸ்தோத்திரம். | ... | ... | |
| நைமிசாரண்யத்தில் பிரஸ்தாபனை. | ... | ... | |
| பிரம்மாவின் பிறப்பு | ... | ... | |
| விராக் அவதாரம். | ... | ... | |
| கருடருடன் சம்பாஷணை | ... | ... | |
| கருக்மந்தன் லக்ஷ்மீதேவி சம்பாஷணை | ... | ... | |
| ஸ்ரீ திருப்பதி யுகங்கள்பேர். | .. | ... | |
| புஷ்கரணி மகத்துவம் | ... | ... | |
| ஸ்ரீ திருப்பதி மலையின் பிரதாபம் | ... | ... | |
| ஸ்ரீ திருப்பதி அனந்தநாமம் | ... | ... | |
| சோழராஜா சாபம் அடைதல் | ... | ... | ,, |
| ஸ்ரீ ஹரி வராஹஸ்வாமியை சந்தித்தல் | ... | ... | 11 |
| வகுளமாளிகை யென்பள்யார்? | ... | ... | 12 |
| லக்ஷ்மிதேவி ஹரியுடன் கலகம் செய்தல் | ... | ... | ,, |
| பத்மாவதி ஜனனம் | ... | ... | 13 |
| ஸ்ரீ வேங்கடேஸ்வரர் பத்மாவதியை சந்தித்தல் | | ... | 14 |
| வகுளமாளிகை தூது அனுப்புதல் | ... | ... | 15 |
| ஸ்ரீ ஹரி குறத்தி வேடம் தரித்தல். | ... | ... | ,, |
| வகுளமாளிகை கல்யாண பிரஸ்தாபனை செய்தல் | | ... | 17 |
| குபேரனிடம் கடன் வாங்குதல் | .. | .. | 18 |
| ஸ்ரீ பத்மாவதியின் பூர்வவிர்த்தாந்தம் | ... | ... | |
| ஸ்ரீ திருச்சானூர் மகத்துவம் | ... | ... | |
| ரம்பாதிகள் ஹரியை சோதித்தல் | ... | ... | |
| அலர்மங்காதேவியின் பிறப்பு | ... | ... | |
| லக்ஷ்மி ஹரியை அடைதல் | ... | ... | |
| ஸ்ரீ திருச்சானூர் அலர்மேல்மங்காபுரம் | ... | ... | |
| திருச்சானூர் அலர்மேலுமங்கையம்மன் பிரம்மவுத்ஸவ கும்மி | | | |
| ஸ்ரீ வேங்கடேஸ்வர சிங்கார கும்மி | ... | ... | |
| திருமலை திருப்பதி ஸ்தலங்களில் ஆர்ஜித உத்ஸவங்கள் | | | |
| திருமலையில் சுவாமியின் பிரம்மோற்சவம் 10 நாள் நடக்கும் | | | |
| ஸ்ரீ திருப்பதி தீர்த்தங்களின் விபரம் | | | |

ஸ்ரீவேங்கடேச பரப்பிரம்மணே நம:



# ஸ்ரீதிருப்பதி வேங்கடாசலபதி

## புராண க்ஷேத்திரஸ்தல மஹாத்மிய வைபவம்.

ஸ்ரீவேங்கடேஸ்வர தோத்திரம்.

நாராயணாவென பாராயணம் பண்ணும் நாள்களிலே
வாராதசெல்வமும் வந்திடுமே வளர் ஆயுளுமே
தீராதரோகமும் திசைதப்பிப்போய்விடும் தேமநள
வாராற்றிருப்பதி வாழ்வெங்கடாசல வள்ளலின்றே.

அலர்மேல்மங்கையை மார்பில் அணிந்து பக்தகோடிகளுக்கு உண்டாகும் பிணி, பயம் ஜனனமரண துக்கங்களை போக்கி ரக்ஷிக்கும்பொருட்டாக ஸ்ரீ திருப்பதி புண்ணிய க்ஷேத்திரத்தில் நின்ற பக்தகோடிகளுக்கு ஆநந்தத்தைவிளைக்கும் அமிர்தமாக யிருக்கின்றது உன் சரித்திரங்களை கேட்டு காதுக்கு ரத்னாபாணங்களாக இருக்கின்றது உன்பூஜை

11|1962

கள் கைகளுக்குஞ்சான் பூஷணங்களாக இருக்கின்றது. உன்னை நினைப்பது இகபரலோகங்களில் சர்வசுகங்களை அடைவதற்குக் காரணமாக யிருக்கின்றது. உன் தரிசனம் சர்வபாவங்களைப்போக்கி சாக்ஷாத் பரமபதபிராப்திக்குமூலமாய் இருப்பதால் ஒபக்தகோடிகளேகேளும்.

## நைமிசாரண்யத்தில் பிரஸ்தாபனை

சௌனகாதிமுநிகள் சூதமாமுனியால் சகலபுராணங்களையும்விசித்திரநடனசிகாமணியாகிய எம்பெருமான்கதைகளைக்கேட்டு ஆநந்தகடலில்மூழ்கினவர்களாய் முடிவிலிவ்வாறு சொல்லத்தொடங்கினர். ஒசூதமாமுனியே இவ்வுலகத்தின்கண் 108 திருப்பதிகள் உண்டல்லவா அவைகளில் ஸ்ரீரங்கம் ஸ்ரீமுஷ்டம், தோதாத்ரி, சாலக்கிராமம், நைமிசம், பதரிகாஸ்ரமம், காஞ்சிபுரம், வெங்கடாசலம்என்னும் 8 முக்கியதிருப்பதிகளில் வெங்கடாசலம் என்கிற இத்திருப்பதி எல்லா திருப்பதிகளிலும் மிகவும் மேலானதாக எப்படி ஆயிற்று தயவுசெய்து விவரிப்பாய்.

## ஸ்ரீசூதமாமுனியின் வாக்கியம்.

ஓ முனிகளேகேளும் ஸ்ரீமன்நாராயணன் சகலசராசரங்களுக்கு ஆதாரமானவனாகவும் பிறப்பு இறப்புஇல்லாத நித்தியானந்தமூர்த்தியாய் அனந்தகல்யாணகுண அக்ஷயமங்கள சொரூபனாய் இருக்கின்றான். பார்க்கடலில் நிர்மலமான அந்தக்கருணையை ஆதிசேஷனுடைய ஆயிரம் தலைகள் என்னும் மாணிக்கங்களால் அலங்கரிக்கப்பட்டு இடதுபுரத்தில் மகாலக்ஷ்மியும் நாபியில் பிரம்மதேவனும் பிரகாசிக்க அவர்பெருமையைசொல்லுவதற்குநாரதர்பராசரர்வியாசர்அம்பரீஷன் முதலிய மகாமுனிகளால் முடியாமல் இருக்கஎன்னால் முடியுமோ ஆனாலும் லக்ஷிமிபதியாகிய எம்பெருமான் உங்களையும்

என்னையும் உலகத்தில் சர்வஜீவகோடிகளையும் ரக்ஷிப்பார். ஆகையால் என்சக்திக்கி தக்கபடி சொல்லுகிறேன் சந்தோஷமாக கேளீர்.

## பிரம்மாவின் பிறப்பு.

ஆதியில்பாற்கடலில் சயனித்திருக்கும் எம்பெருமான் திருநாபிகமலத்தில் சதுர்முகபிரம்மா பிறந்து சகலலோகங்களை சிருஷ்டிசெய்தார். நாலாயிரம்யுகங்கள் அவ்வுலகங்களை ரக்ஷிக்க பிரம்மாவின் பகல்முடிந்துவிட்டது. அப்பொழுது இரவுவர பிரம்மா தூங்கிவிட்டார். இருள் எங்கேயும்நிறைந்து கொண்டது சூரியன் அக்கினியை அளவில்லாமல் பூமியின் மேல்வீசினான். அதனால் ஸ்தாவரஜெங்கமெல்லாம் அடங்கி போய்விட்டது. இருண்டமேகங்கள்அபாரமாக ஆகாயத்தில் வருஷங்களைக்கொட்டதொடங்கிற்று. அந்தஜலபெருக்கினால் உலகமெங்கும் ஜலம் நிரம்பிவிட்டது. அப்போது நீர்பளுவுக்குதாளாமல் பூமி கடலுக்குள்மூழ்க இரண்ணியாக்ஷன் என்னும் ராக்ஷஸன் அதை ரஸாதலலோகத்திற்குகொண்டுபோய் அநேககாலங்ககமாய் அனுபவித்துக்கொண்டிருந்தான். இப்படியிருக்க, பிரம்மாவின் இரவுகாலம் முடிந்து பகல்வருகிற சமயத்தில் மறுபடியும் பிரம்மாவை எழுப்புவதற்கும்சிருஷ்டி உண்டாக்குவதற்கும் எண்ணங்கொண்டு ஸ்ரீமன்னாராயணன் சுவேதவராக அவதாரத்தை எடுத்தார்.

## வராக அவதாரம்

கண்ணைமூடி திறக்கிறகாலத்துக்குள்ளாக ஆகாயம் பூமி நிறைந்துவிட்டதைப்போல் பயங்கரமாகிய கோரைகளுடன் வராகவதாரத்தைகொண்டுஈரேழுபதினான்கு லோகங்கள்கிடுகிடென்று சிங்ககர்ஜனை செய்துக்கொண்டு பூமியைமறுபடியும் எடுத்துகொண்டுவர கடலில் பிரவேசித்தார். அப்போது

ஸாதலத்திற்குபோககோபமுள்ளவனுய் வீராவேசத்துடன் அந்தராக்ஷஸவீரன் சண்டைக்குவந்தான், ஹரிசண்டையில் அவன்சிரத்தை துண்டுதுண்டுகளாக பயங்கரமான கோரைகளால் கிழிக்க அந்த ராக்ஷஸன்மடிய ரக்தமானதுபிரவாகங்களாக கடலெல்லாம் நிரம்பிவிட்டது. அதைப்பார்த்து சித்தசாதிபமுதலியதேவகணங்கள் கிடுகிடென்று நடுங்கிவிட்டார்கள் அப்போதுபூமியை மறுபடியும் நிலைநிறுத்தி பிரம்மாவை எழுப்பி சிருஷ்டி செய்யும்படி உத்திரவு செய்தார். தேவகணங்கள் அந்தவராகமூர்த்தியின்மேரில்புஷ்பங்களை வருஷித்து ஜெயஜெயஹரி யென்று சப்தஞ்செய்தார்கள்.

## கருடருடன் சம்பாஷணை.

இவ்விதமாகவீராதிவீரனுகிய ஹரி தன்காரியம்முடிந்தபிறகு திரும்பி பார்க்கையில கைகளைகட்டிக்கொண்டு சரணுகதனுக நின்றிருந்த கருத்மந்தனைப்பார்த்து இவ்விதமாக சொன்னூர். ஓ பக்ஷேந்திரனே பயங்கரமாகிய கோரைகளுடன் மேருபர்வதத்தைப்போன்ற ஆகாரத்துடன் எவ்விதமாக நான் வைகுண்டத்திற்கு வருவேன் லக்ஷ்மிதேவி என்ரூபத்தைப்பார்த்து பயப்படுவாளாகையால் நான்யிவ்வுலகத்திலேயே நின்றுவிடுவேனுகவும் இப்படிசொன்ன ஹரியினுடைய வாக்கியங்களுக்கு ஆச்சர்யப்பட்டுக்கொண்டு பக்ஷேந்திரன் ஓ சுவாமி உங்கள் ஹ்ருதயத்திலேயே லக்ஷ்மிதேவி எப்போதும் குடியிருக்க வன்பயப்படுவார் தாங்கள்பூமியை எடுக்கும் காரணத்துக்காக பயங்கரமான அவதாரத்தை கொண்டீரே தவிர மற்றொன்றும் யில்லை ஆகையால் தயவுசெய்து வைகுண்டம்வருவீரென்று பிரார்த்தித்தான். அதற்கு எம்பெருமான் ஓ பக்தசிகாமணியே என்பக்தகோடிகளை விட்டு நான் எவ்விதமாக இருப்பேன். அவர்களை ரக்ஷிக்கும்பொருட்டாக

யும் அவர்களுக்கு நேரிடும். இடையூறுகளைப்போக்கி ஆதரிக்கும் பொருட்டாகவும் அவர்களுக்கு என்தரிசனத்தினாலும் கிருபாகடாக்ஷத்தினாலும்பாவங்களைப்போக்கிபரிசுத்தர்களாகச்செய்து வைகுண்டபிராப்த்தியைத்தருவதற்காகவும் உலகத்தில் தரும்விரோதிகளையும் கொடூரமானவர்களையும் ராக்ஷஸர்களையும் கொன்று தருமபரிபாலனம் செய்வதற்காக இவ்வுலகத்திலேயே நிற்பேன். ஆகையால் நீவைகுண்டத்துக்கு போய்லக்ஷ்மிதேவியுடன் என்வார்த்தைகளைச்சொல்லிகிரீடாசலத்தை உன்சிரத்தின்பேரில் வைத்துக்கொண்டு கூடியசீக்கிரத்தில்வருவாய், இவ்விதமாகச்சொல்லிஸ்ரீமந்நாராயணன் தான் நிற்பதற்கு நல்ல இடத்தைதேடிக்கொண்டு கௌதம ஆற்றிற்கு சமீபத்தில் தெற்கில் சுவர்ணமுகி ஆற்றிற்குவடக்கில் திவ்யஸ்தலத்தைப்பார்த்து பக்ஷிசநியை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்.

## கருத்மந்தன் லக்ஷ்மிதேவி சம்பாஷணை.

கருத்மந்தன் வைகுண்டத்துக்கு போய் லக்ஷிமிதேவியை கண்டு ஸாஷ்டாங்க தெண்டனிட்டு இவ்விதமாக சொல்லத்தொடங்கினான் மூன்று லோகங்களையும் ரக்ஷிக்கும்லோகமாதாவே ஜலத்தில் மூழ்கின உலகத்தை மறுபடியும் கொண்டுவருவதற்காக பயங்கரமாகியவராகவதாரம் எடுத்து இரண்ணியாக்ஷனைகொன்று உலகத்திலேயேநிற்கும்பொருட்டாக கிரீடாசலத்தை என்சிரத்தின்மீது கொண்டுவரும்படி யாக்யாபித்தார் ஆகையால் மனவுசெய்தேன் என்று சொல்ல லக்ஷ்மிதேவி அந்தபயங்கரமாகிய ரூபத்தை தரிசிக்க ஆவலுடையவளாயிருக்கின்றேன் ஆகையால் ஸ்ரீ ஹரியை சீக்கிரத்தில் அழைத்துக்கொண்டு வரும்படி சொல்ல அதைகேட்டு கருத்மந்தன் தாயே நான் இவ்விடம்வரச்சொல்லி எவ்வ

ளயுசொல்லியும் அவர்கேட்காமல் பக்தகோடிகளை ரக்ஷிக்கும்பொருட்டாக உலகத்திலேயே நிற்பேனென்றும் வைகுண்டம்வந்தால் தன்பயங்கரமாகியரூபத்தைதாங்கள்பார்த்து பயப்படுவீர்களென்றும் சொன்னார். அதைகேட்டு லக்ஷ்மிதேவி மிகவும்யாச்சர்யப்பட்டு ஓ பக்ஷிராஜனே! அந்தபகவானுடையமார்பில் குடிஇருக்கும் நான் ஏன்பயப்படுவேன் அங்குஷ்டமாத்திரராய் சயனித்தபோதும் கூர்மாவதாரம் முதலிய அவதாரங்கள் எடுத்தபோதும் அவர்க்குள் நானிருந்தேன் இதை அவர்யறிந்தும் அவ்விதமாய்ச்சொன்னது ஆச்சரியம். அவர் இவ்விடம்வராமல் போனாலும் நான் அவ்விடம் வருவேன் என்றுசொல்லி தான்ஒருகளயோடு கிரீடாசலம் ஏரியதை கருத்மந்தன் ஸ்ரீஹரி சந்நிதானத்திற்கு கொண்டு வந்தான். அப்போது முப்பத்து முக்கோடி தெய்வங்களும் மும்மூர்த்திகளும் யத்திருப்பதி புண்ணிய க்ஷேத்திரத்துக்கு வந்து பகவானை யனேகவிதமாக கொண்டாடினார்கள். ஓசுவாமி லக்ஷ்மிதேவியை மார்பில்யணிந்து உங்கள் சௌமியரூபத்தை தரித்துஉலகத்திலேயே நின்றுராக்ஷஸர்களையும் துன்மார்க்கர்களையும் கொன்று பக்தகோடிகள்யுடைய பாவங்களைப் போக்கி ரக்ஷிப்பாய் சரணம் சரணம் என்று ஓசைவிட்டார்கள். அதற்கு பகவான்பயமென்று சொல்லி பக்தகோடிகளை ரக்ஷிப்பேனென்று பிரதிக்ஞை செய்தார்.

## ஸ்ரீதிருப்பதியின் யுகங்கள் பேர்.

கிருதாயுகத்தில் விருஷபாசூரன் என்கிறராக்ஷஸன் பகவானோடு சண்டைசெய்து மடிந்தபடியால் விருஷபாத்ரி என்றுபெயர், த்ரேதாயுகத்தில் அஞ்சனாதேவி குழந்தைகள் இல்லாமல்மதங்கமாமுனி சொன்னதைப்போல் ஸ்ரீமந்நாராயணன் பாதகமலங்களை தொழுதிருந்துவாயு அனுக்கிரகத்தி

ளாலே அனுமாரை பெற்றதினால் அஞ்சனாசலம் என்றும் பெயர். துவாபரயுகத்தில் ஆதிசேஷனுக்கும் வாயுபகவானுக்கும் பலா பலங்களைப்பற்றி வாதம்நேரிட ஆதிசேஷன் மலையைச்சுற்றிக்கொள்ள அதை வாயுபகவான் அப்புறம்எறிந்துவிட்டபடியால் ஆதிசேஷன் வைகுண்டத்துக்குபோக வெட்கபட்டு இவ்விடத்திலேயே அந்தர்தானமானபடியால்இதற்கு சேஷாத்திரி என்றுபெயர், கலியுகத்தில் ஸ்ரீமந்நாராயணன் லக்ஷிமீசமேதராய் இவ்விடம் நின்று பக்தகோடிகளுடைய பாவங்களை தகித்து, மோக்ஷத்தை கொடுப்பதினால் வெங்கடாசலம் என்று பெயர்.

## புஷ்கரணி மஹாத்துவம்.

ஈஸ்வரனை அடைந்து கங்காபவானி ஸமஸ்த தீர்த்தங்களிலும் மேலானநதிரூபமாய் இருப்பதைக்கண்டு ஸரஸ்வதி அக்கங்கையைப்பார்க்கினும் புண்ணிய பிரதமான நதிரூபமாக இருக்கயெண்ணி ஸ்ரீஹரியைகுரித்து தவம் செய்தாள். அப்போது தன்புத்திரனை புலஸ்தியபிரம்மா அவ்விடம் வர தன்புத்திரியென்றெண்ணி மரியாதைசெய்யாமலிருந்தாள், அவரதற்கு கோபித்துக்கொண்டு உனக்குஸர்வதீர்த்தோத்தமநதிரூபமுண்டாகாமல்போகக்கடவதென்றுசாபம்கொடுத்தார். பிறகுநாராயணமூர்த்தி பிரசன்னராகஅவரைக்கண்டு நமஸ்கரித்து தன்மனோபிப்ராயங்களைசொல்ல அவர் நீபுலஸ்திய பிரம்மாவால் உண்டானசாபத்தால் ஸர்வோத்தம நதிரூபமாகமாட்டாய், ஆனால்சேஷாசலத்தில் சரோரூபமடைந்து ஸமஸ்த்த தீர்த்தங்களில் சிரேஷ்டமுடையவளாய் ஸ்நானஞ் செய்தவர்களுக்கு சகல பாபங்களை நசிக்கசெய்தால் உன்னிடத்தில் சமஸ்ததீரத்தங்களும்மார்கழிமாதத்தில்ஸ்நானஞ்செய்ய தம்மிடத்தில் பாபாத்துமாக்கள் ஸ்நானஞ்செய்

துவருகிறதிஞலுண்டான பாவங்களை நிவர்த்தியடைவார்க ளென ஸரஸ்வதி சரோரூபமாக அவதரித்து, சுவாமி புஷ்கர ணியென விளங்குகிறுள்.

ஓ சௌனகாதி முனிகளே, ஸ்ரீமந்நாராயணன் லக்ஷ்மி நீளாதேவியுடன் கூடி புஷ்கரணியில் கிரீடிப்பதனுல் இதுபரி மளமாகவும் சுப்பிரதமாகவும் இருக்கின்றது. கோடிதீர்த்தங் களைப்பார்க்கிலும் மேன்மையுடையதாய் பக்தகோடிகளுக்கு நன்மையுண்டாக்குவதில் கர்ப்பக விருக்ஷத்தைப்போலிருக் கின்றது. மானமும் தரிசனமும் பாவங்களைப்போக்கி பரிசுத் தர்களாக பக்தர்களைச்செய்ய அவ்விடத்திலேயே குடியிரு ந்து தபஜபங்களும் ஸ்நானபானங்களும் செய்துகொண்டிருக் கும் தன்யார்களுடையபலத்தைஎன்னசொல்லலாம். நல்லோ ர்களுக்கும் யோகிகளுக்கும் தேவர்களுக்கும் ஸ்திரவாசமாகி ய இப்புண்ணிய புஷ்கரணியில் ஸ்நானம் செய்து பாவங் களைப்போக்கி அளவற்ற புண்ணியங்களைஉண்டாக்கும் புஷ்க ரணிதீர்த்தம் ஒரு தீர்த்தமாகவே தோன்றினுலும் அதில் ஒன்பது தீர்த்தங்கள் அந்தர்பூதமாய் இருக்கின்றன. அவை கள் யாவன குபேர, காலவ, மார்க்கண்டேய, அக்னி, எம, வசிஷ்ட, வாயு, வருண, சரஸ்வதி தீர்த்தங்களாகும்.

## ஸ்ரீ திருப்பதி மலையின் பிரதாபம்.

புண்ணியங்களுக்கு இது தங்கத்தைப்போல் மின்னிக் கொண்டு பாபிகளுக்கு பார்க்கவே பயமுறுத்துக்கொண்டும் இருக்கும். கலியுகத்தில் கற்களாய்த்தோன்றி துன்மார்க்கர் களுக்கு இருண்டதாயிருக்கும். லக்ஷ்மிவாசகமாய்கோடிபக்த் தர்களுக்காகிலும் குறைவில்லாததாய்இருக்கும். ஞானிகளு க்கும் யோகாப்பியாசிகளுக்கும் அஷ்டமாதிசித்தர்களுக்கும் முக்கியஸ்தானமாகவும் சித்தியை உண்டாக்கும் புண்ணிய க்ஷேத்திரமாகயிருக்கும்.

## ஸ்ரீதிருப்பதி அனந்தநாமம்.

கருத்மந்தன் கொண்டுவந்ததினால் கருடாசலமென்றும் சிந்தனைகளைதீர்க்கும் ஆலயால் சிந்தாமணியென்றும், ஸ்ரீராமர் பூர்வத்தில்வந்ததினால் ராமகிரியென்றும், கிருஷ்ணமூர்த்திவந்ததினால் கிருஷ்ணகிரியென்றும், நரசிம்மமூர்த்தி இரண்ணியனைக்கொன்றதினால் நரசிம்மாசல மென்றும், பக்தகோடிகளுக்கு காமிதார்த்தங்களை கொடுப்பதினால் கர்பகிரியென்றும், கனகம் நிறைந்ததாகையால் கனககிரியென்றும், ஞானிகளுக்கு ஞானம் அதிகரிப்பதினால் ஞானாத்ரி யென்றும், நீலனென்பவன் குடியிருந்ததினால் நீலகிரியென்றும். லக்ஷ்மிவசிப்பதினால் ஸ்ரீநிவாசமென்றும, நாராயணன் தவம்செய்ததினால் நாராயணகிரி யென்றும், சர்வபுண்ணிய தீர்த்தங்கள் இருப்பதினால் தீர்த்தகிரியென்றும், வைகுண்டத்தில் இருந்துவந்ததினால் வைகுண்டகிரி யென்றும், புஷ்கரணியிருப்பதினால் புஷ்கரகிரியென்றும்பெயர்.

## சோழராஜன் சாபம் அடைதல்

ஸ்ரீபூம்தவி நீளாம்தவி சமேதராய ஹரி நிதநிய முக்தர்களைப் பார்க்கப் பிரியமுள்ளவராய் வைகுண்டத்திற்குப் போகசேஷாத்திரி யிலிருந்தவராகமூர்த்தி விஸ்வகர்மாவால ஏர்படுத்திய நகரத்தை அந்தர்தானம்செய்து இச்சாவிஹாரமாய் திரிந்துக்கொண்டிருந்தார். அதை திரிலோகஸஞ்சாரியும், திரிகாலக்ஞானஸம்பன்னனும், ஸர்வஜீவதயாபருமாகிய நாரதமாமுனி அறிந்து பிரம்மாவுக்கு தெரிவிக்க அவர் ஸ்ரீஹரி பூமியில் இருந்தபரியந்தம் ஜனங்கள் ஸ்த்துவகுணமுளளவாகளாய் பாபவிம்மாசனாகளாய்பரிசுத்தாகளாயிருந்தாாகள். ஸ்ரீஹரி இல்லாமற்போனால் கலியுகமாயை மூண்டு பாவங்களின்பெருக்கினால் நாகப்ராப்தி யடைவார்களாகையால் நீஸ்ரீஹரியைமறுபடியும் வரவழைக்கவதாவது நலலவுபாயம் செய்யவேண்டுமென, ஜான்லவி ஆற்றங்கரையில் கஸ்ய

பாதி முனிகள் எக்கியம்செய்ய அவர்களிடம் நாரதர்போய் எக்கியபலத்தையாருக்குதருவீரென்றுகேட்டார். திருமூர்த்திகளில் மோக்ஷத்தை கொடுக்ககூடிய கடவுள்யாரோ அவருக்கு தருவோமென்றுசொல்லி அதை விசாரிப்பதற்காக பிருகுமாமுனியை அனுப்பினார்கள். அவர் சத்தியலோகம்போய் தபோஜனங்களுடன் கொலுவிருந்து பிரம்மாவைப் பார்த்து கும்பிட்டு உட்காரச்சொல்லுவதற்குமுன்பாக உட்கார்ந்ததினால்பிரம்மாகோபம்அடைந்தார். அதைபார்த்துபிரம்மாரஜோகுணத்தாரென்றும்ஆகையால் அவருக்கு தேவாலயமில்லையென்றும் நிச்சயித்து கைலாயத்திற்குப்போய் பார்வதிசமேதராய் கிரீடித்துக் கொண்டிருந்த சிவபெருமான் அரண்மனைக்குள் நுழைந்து திடீரென்றுநிற்க பார்வதிதேவி வெட்கமடைய அதற்கு கோபத்துடன்கண்கள்இரத்தத்தைப்போல் சிவந்திருப்பதைபார்த்து சிவபெருமான் தமோகுணரென்றும்,ஆகையால்அவருக்குதேகபூஜையில்லாமல் லிங்கபூஜைஉண்டாயிருக்கிறதென்றும்அறிந்து பிறகுவைகுண்டத்திற்குப்போய்ஸ்ரீலக்ஷ்மிசமேதராகிய பெருமானை காலால் மார்பிலுதைக்கஅவரதற்கு அந்தமகாமுனிகளுடைய காலுக்குநோய்உண்டாயிருக்குமென்று ஆதரிக்கமுனிவர் விஷ்ணுவே சத்துவகுணத்தாரென்றும்மோட்சத்தைகொடுக்கக்கூடியவரென்று நிச்சயித்தார். அப்பொழுது மார்பிலிருந்தலட்சுமிதேவி கோபித்துக்கொண்டு கொல்லாபுரம் வந்து சேர ஹரி திருப்பதியில் பாம்பு புத்தில்லட்சுமியைபிரிந்தவிசனத்துடன் வந்திருந்தார். அப்பொழுது பிரம்மாவும் ருத்திரனும் பசுகன்றுருபங்களை தரித்து சோழராஜாவின் பசுமந்தைகளில் சேர்ந்து புத்திணிடம்வந்து க்ஷீரத்தால் ஹரியை திருப்தி செய்துக்கொண்டுவர பசுவுக்கு பாலில்லாமல் போவதை சோழராஜ மனைவி யறிந்து அதைக் கண்டுபிடிக்கும்படி

இடையனுக்கு உத்திரவுசெய்தாள். பசுவுபாலை புத்திலிடு வதைக்கண்டு இடையன்கோபித்துக்கொண்டு தன்கோடலி யால் நெற்றிபின்பேரிலடிக்க ஹரிதன்சிரசை கொடுத்தபடி யால் அடிப்பட்டு ரத்தபிரவாகம் வர அதைகண்டு பயந்து இடையன் மடிந்தான். அதைவிசாரிப்பதற்கு சோழராஜாவர அவர் பேயாக போகக்கடவதென்று சாபம் கொடுத்தார். அப்பொழுது அந்தராஜன்கண்டு நடுங்கி தன்சாபவிமோசன மாவதற்கு வேண்டி னதற்கு ஸ்ரீ ஹரி நீ இந்த சாபத்தை கலியுகமிருக்கும் பரியந்தம் அனுபவிக்க கடவாய், ஆனால் நான் ஆகாசராஜனுடைய புத்திரியான பத்மாவதியை விவா ஹம் செய்வேன். அப்பொழுது நவரத்னகசிதமான கிரீடம் செய்து எனக்கு சமர்ப்பித்தால் அதை நான் வெள்ளிக்கிழ மைதினங்களில் ஆறுநாழிகைதரிப்பேன். அந்த காலம் மாத் திரம் உனக்கு பிசாசரூபத்தால் கஷ்டம் நேரிடாதென்றார்.

## ஸ்ரீஹரி வராஹஸ்வாமியை சந்தித்தல்.

அதற்கு பின்பு ஸ்வாமி தன் சிரத்தில பட்ட அடியால் நோய் அடைந்தவராய் தேவகுருவாகியபிரகஸ்பதியைநினை த்தார், நினைத்தமாத்திரத்தில் எதிரில் வந்து நிற்க அவரிடம் யாவற்றையும்சொல்ல அவரதற்கு எருக்கம்பருத்தியை அத்தி பாலில் தோய்த்து கட்டினால் நன்றாய்விடுமென்றுசொன்னார் ஒருநாள் மருந்தைக்கொண்டுவருவதற்காக ஸ்வாமிகாலையில் புரப்பட்டுப்போக அச்சமயத்தில் வராஹஸ்வாமி விரஷபாசு ரனைக்கொன்று கோபத்துடன் வர எதிரில்ஸ்ரீஹரிநாரூபமாக நின்றிருப்பதைப்பார்த்து இவரும் ஓர் ராக்ஷஸனென்றெண் ணி அவரை பின்தொடர்ந்தார். அப்பொழுதுஹரி சமீபத்தி லிருந்த ஓர் புத்தில் பிரவேசித்தார். வராஹமூர்த்தி யவ்விட ம் வந்தவர் ஸ்ரீஹரியென்றறிந்து சங்கதிகளெல்லாம் தெரிந்து

கொண்டு அவருக்கு நூறடியிடம் கொடுக்கிறதாகவும் அதற்கு கிரயம் கொடுக்கவேணுமெனவும் கேட்டார். அதை கேட்ட ஹரி தன்னை லக்ஷ்மிதேவி விட்டு கொல்லாபுரம் போய்விட்டாரென்றும் அதனால் தன்னிடம் பொருள் யில்லையென்றும் ஜனங்களிடம் சாமான்னிய நரனைப்போல் பிச்சையெடுத்து கடன் கொடுக்கிறேனென்றும் தான் ஜனங்களை வரவழைத்து உங்கள் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து உங்களை கும்பிட்டு காணிக்கைக்கொடுக்கும்படி ஏற்பாடு செய்கிறேனென்றும்; முன்போஜனம் உங்களுக்கு கொடுத்து பின்னால் நான்புசிப்பேனென்று சொல்ல வராஹஸ்வாமிகேட்டு சந்தோஷப் பட்டவராய், நூறடிநிலம் அளந்துகொடுத்தார். தன்னிடம் சமயல் செய்துவருகிற வகுளமாலிகை என்பவளை ஸ்ரீஹரிக்குஉபசரணை செய்யும்படி நேமித்தார்.

## வகுளமாலிகை யென்பவள் யார்.

த்வாபரயுகத்தில் கம்ஸன், சாணூர், பகாசுரன், சிசுபாலன் முதலிய துன்மார்க்கரை சம்ஹரித்து சன்மார்க்கரை ரக்ஷிக்கும்பொருட்டாக ஸ்ரீஹரி கிருஷ்ணவதாரம் யெடுத்தபொழுது அவர் லீலாவதார திருவிளையாடல்களை பார்த்து ஆனந்தித்துகொண்டிருந்த யசோதாதேவி குணனுபந்தத்தால் பிரம்மதேவர் வகுளமாலிகையாக சிருஷ்டித்து வராஹஸ்வாமி சன்னதியில் சேவை செய்துக் கொண்டிருக்கும்படி நேமித்தார்.

## லக்ஷ்மிதேவி ஹரியுடன் சந்தித்தல்.

திருமூர்த்திகளை பரீக்ஷிக்கும்பொருட்டாக பிருகுமாமுனி ஸ்ரீ ஹரியின்மார்பில் உதைத்தார். மார்பில் யிருந்த லக்ஷ்மிதேவி மிகவும் கோபங்கொண்டு ஸ்ரீ ஹரியைநோக்கி இவ்வாறுசொன்னாள் ஓஸ்வாமி, மார்பிலுதைத்த பிருகுமா

முனியின்பேரில் கோபம் எள்ளளவாகிலும் கொள்ளாமல் சந்தோஷப்பட்டுக்கொண்டு ஸன்மானித்தீர். ஆகையால் உங்கள் சரணாரவிந்தங்களை நினைத்துக்கொண்டு எவ்விடமாவது போய்விடுவேன். சர்வபூதங்களில் நிறைந்திருக்கும் பரம்பொருளென்றெண்ணாமல்கெர்வத்தினால் உதைத்த பிருகுவை தண்டிக்காமல் போனீர். ஆகையால் எம்மனதுக்கு இந்த காரியம் எவ்வளவுமாத்திரமும் ஒப்பாது. நான் எங்கேயாவதுபோய்விடுவேனென்று மிகுந்தகோபமுள்ளவளானாள். அதற்கு ஸ்ரீஹரிலக்ஷ்மிதேவியைப்பார்த்து ஓலக்ஷ்மி நீஇவ்விதமாக கோபம் அடைவது தக்கதல்ல பிரம்மதேவனுக்கு குமாரனை பிருகு உனக்கு பேரனாய் இருக்கின்றான். பிள்ளைக்கு பிள்ளையாகிய பிருகுவின் பாதம்பட்டதினால் என்ன குறையுண்டாகும். கெற்பத்தில் குழந்தை உதைத்தால் தாயுக்குகோபமுண்டாகுவது தர்மமோ, அண்டபிண்டசராசரங்களை கற்பத்தில் தரித்திருக்கும் நாம்பக்தர்களுடைய சிறியகுற்றங்களை மன்னிக்காமல்போவது நியாமாகுமோ இதல்லாமல் பிருகுமகாபிராம்மண சிரேஷ்டன் தபசிகளில் சிறந்தவன் தத்வஞானி, உண்மையானபக்தியை என்மேல் நிருத்தின அன்பன், ஆகையால் நீ அவன்செய்ததை குற்றமென்றெண்ணாமல் க்ஷமித்து சமந்தமுள்ளவளாவாய்.

ஸ்ரீ ஹரி எவ்வளவுசொல்லியும் கேழ்க்காமல் கோபங்கொண்டு லக்ஷ்மி தேவி வைகுண்டத்தைவிட்டு கொல்லாபுரம் சேர்ந்தாள். அப்புரவாசிகள் அந்த ஜெகன்மாதாவை அனேக விதங்களாக பக்திபூர்வகமாய் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள்.

## பத்மாவதி ஜனனம்

சந்திரகுலத்தில் பாண்டவ தௌஹித்திர வம்சத்தில் ஸுவீரன் யென்னும் ஓர் ராஜனுக்கு சுதர்மனென்றோர்

புத்திரனிருந்தான். அவன்பிள்ளையில்லாமல் வெகுகாலம் ஸ்ரீவெங்கடேச்வரஸ்வாமியை நோக்கி தவம்செய்ய ஆகாசராஜனென்றோர் பிள்ளையை அடைந்தான். அவன் தரணிதேவியெனும் ஒருபெண்ணை விவாஹம்செய்து அனேககாலம் சுகமாய்வாழ்ந்தான். அவனுக்குபிள்ளையில்லாமல்வெகுகாலம் சிந்தித்து பிறகு தன்குருவாகிய பிருகஸ்பதியை கண்டு குறைகளைச்சொல்ல அவர் புத்திரகாமேஷ்டியாகம் செய்தால் ஸந்தானம் உண்டாகுமென அதற்கு எக்கியசாலையை வருகையில் ஓர் தாமரைமலரும் அதினிடமாக ஒருதிவ்யஸௌந்தரிய மங்கள கனகவிக்ரஹத்தைப்போன்ற ஓர் பெண்குழந்தையும் பார்த்தார்கள். ஆகாசராஜன் அக்குழந்தையை தன்பத்தினியிடம் கொடுத்து மிகவும் பிரீதியுடன் வளர்த்துக்கொண்டிருந்தான் தாமரைபத்மத்தில் உண்டானதாகையால் அந்த பெண்ணுக்கு பத்மாவதியென்று பேரளித்தார். பிறகு இந்த ராஜனுக்கு வஸுதானனென்றோர் பிள்ளைபிறந்தான். சிலநாளைக்கு பத்மாவதி பருவமுடையவளாய் ஒருநாள் தன் தோழிமார்களுடன் புஷ்பவனத்தில் பூமலர்கொய்துகொண்டிருந்தாள்.

## ஸ்ரீ வேங்கடேஸ்வரர் பத்மாவதியை சந்தித்தல்

இப்படியிருக்கையில் புதிவிருந்தபெருமான் வேட்டையாட யெண்ணினார் அப்பொழுது ஓர் வெள்ளைகுதிரையைக் கண்டு அதன்மீது ஏறிப்புறப்பட்டார், எதிரில் ஓர்காட்டானையைப்பார்த்து அதைத்துரத்திபின்சென்றார். அந்தயானை வெகுதூரம் ஓடி பிறகுதிரும்பி சரணம்செய்து ஓஸ்வாமி அடியேனை காருமென அப்பரன்தாமன் அதைகாத்தருளி திரும்புகையில் அவ்விடம் பூமலர்கொய்துக்கொண்டிருந்த பத்மாவதியைக்கண்டார் குதிரையினின்றிறங்கிபத்மாவதியினிடஞ் செல்லுகையில் பத்மாவதிதன தோழிகளைவிட்டு

யாரென விசாரிக்கச்சொன்னாள். அதற்குஸ்வாமிதான்சந்திர வம்சபாரம்பரையெனவும் க்ஷத்திரியகுலமெனவும் வசுதேவன் தேவகிதேவிதாய்தந்தைகளெனவும் தன்பேர்கிருஷ்ணனெனவும்கூறபத்மாவதிகேட்டு தன்வரலாற்றையும் தெரிவித்தாள். அப்பொழுதுஎம்பெருமான் தன்னைவிவாஹம் செய்துகொள்ளும்படிகேட்டார், அதற்குபத்மாவதி கோபம்கொண்டுதன் தோழிகளால் அடிக்கச்செய்தாள். எம்பெருமான் அவ்வடிகளை பொருக்கமாட்டாமல் திரும்பிவெங்கடாத்திரிக்கு வந்து துயரத்துடன் இருந்தார்.

## வகுளமாலிகையை தூது அனுப்புதல்.

புற்றில்சேர்ந்து பத்மாவதியை நினைத்துக்கொண்டு மவுனமாய் இருந்தஹரியை வகுளமாலிகைகண்டு விசாரித்து அவர் மனோஅபிப்ராயத்தைத்தெரிந்து ஸ்வாமி நான் எவ்விதமாகிலும் பத்மாவதியை உங்கள்மீது பிரியமுள்ளவளாகும்படி செய்வேனென்றுசொல்லி ஸ்வாமியின் உத்திரவுபெற்றுக்கொண்டு ஆகாசராஜன் பட்டணத்துக்குபுரப்பட்டாள். வகுளமாலிகை அப்பட்டணத்திற்குவருவதற்குமுன்பாக,

## ஸ்ரீ ஹரி குறத்திவேடம் தரித்தல்.

ஹரி குறத்திவேடம்தரித்துக்கொண்டு வகுளமாலிகை யுக்தியாக விவாஹபிரஸ்தாபனை செய்வாளோ செய்யமாட்டாளோ என்றுசந்தோஷித்து ஆகாசராஜன் பட்டணமாகிய நாராயணபுரத்தில் பிரவேசித்துவீதிகளில குறிச்சொல்லுவேனென்றும்பச்சைகுத்துவேன் என்றும்கூறினார். இப்படி இருக்க நாராயணவனததில் பத்மாவதி நந்தவனத்தில ஹரியைக் கண்டதுமுதல் தாபஜ்வரமுள்ளவளாய் அன்னபானங்களின் மேல் இஷ்டமில்லாமல் விசனத்துடன் இருந்தாள். அதைதெ

ரிந்து தாய்தந்தைகளாகிய தரணிதேவியும் ஆகாசராஜனும் மிகவும் விசாரப்பட்டு பிராம்மணோத்தவர்களை வரவழைத்து பத்மாவதியின் நிஜஸ்திதியைசொல்லஅவர்கள்ருத்ராபிஷேகம்செய்து அஜ்ஜலத்தைகொடுத்தால் தாபஜவரம்நீங்குமென்ருர் அப்பொழுது அரசன் அபிஷேகம்செய்வதற்கு ஏர்பாடு செய்ய கோவிலிடம் அனேக சுமங்கலிஸ்திரீகள் வந்துசேர அவர்களோடு வகுளமாலிகைசேர்ந்துக்கொண்டு தன்னையும் தரணிதேவியிடத்திற்கு இட்டுக்கொண்டுபோகும்படிகேட்டுக்கொண்டாள். இப்படியிருக்க ஹரில் குரத்திகுரிசொல்லுகிறதென்றுதரணிதேவிகேள்விப்பட்டு குரத்தியைவரவழைத்தாள் தரணிதேவிகுரத்தியை தனக்கு குரிசொல்லும்படிகேட்க அதற்கு குரத்திவேடம்பூண்ட ஹரி இவ்வாருசொல்லதொடங்கினூர். உன்எண்ணமானதுகைகூடிவரும் நீஉன் பெண்குழந்தைபேரில் ஒரு எண்ணம் கொண்டிருக்கிருய். அவள்பூந்தோட்டத்தில் ஒரு புருஷனைக்கண்டு அதனால் தாபஜ்வரமடைந்தாள. அந்தபுருஷன் யார்யென பொன்மலையின் பேரில்பட்ட நாமத்தைதரித்துக்கொண்டு சரணமடைந்தவர்களை ரக்ஷித்துகொண்டும் தருமவிரோதிகளைநசிக்கச்செய்துகொண்டுமஇருப்பார். அவர் ஸ்ரீமந்நாராயணரே தவிரநரனல்ல. அவர்உன்பெண்ணைவிவாகம்செய்வதற்குஎண்ணம்கொண்டிருக்கிருன்-உன் பெண்ணும் அவர்பேரில் பிரியம்கொண்டிருக்கிருள். ஆகையால்அவருக்குஉன்பெண்ணைகொடுத்து விவாகம்செய்தால்சுகமாய்வாழ்வாள். இன்னும்கொஞ்சம்நேரத்தில் கல்யாணபிரஸ்தாபனைசெய்வதர்காக ஓர்பெண்பிள்ளை வருவாள் நான்சொன்னதெல்லாம் எண்மையானபிறகுஇனும்வாங்கி கொள்ளுகிறேனென்று சொல்லி எழுந்து அப்புரம்போய் தன் நிஜரூபத்தைகொண்டு ஸ்ரீ ஹரி திருவேங்கடமலையை சேர்ந்தார்.

## வகுளமாலிகை கல்யாண பிரஸ்தாபனைசெய்தல்.

ருத்திராபிஷேகத்தின் தீர்த்தத்தை சுமங்கலி ஸ்திரீகள் தாணிதேவியினிடம் கொண்டுவர அதைதாணிதேவி பத்மாவதிதேவிக்குகொடுத்தாள். வகுளமாலிகை சுமங்கலிஸ்திரீகளை கூட்டிவந்து தாணிதேவியைப்பார்த்துநமஸ்கரிக்க தாணிதேவிநீயாரெனவிசாரிக்க அதற்குவகுளமாலிகை இவ்வாறுசொல்லுகிறாள். ஓதாணிதேவி நான் திருப்பதியிலிருக்கும்வெங்கடாசலபதி அனுப்பிவந்தேன். கல்யாணவிஷயமாய் என்னை அவர் அனுப்பினார். உன்பெண்ணாகிய பத்மாவதியை அவருக்குகொடுத்து விவாகம்செய்யும்படி பிரார்த்திக்கிறேன். என் பேர் வகுளமாலிகையென்றாள். அதற்கு தாணிதேவி அவர்குலகோத்திரங்கள்என்னவென்றுகேட்கவகுளமாலிகை அவர் தாய்தந்தை தேவகிவசுதேவரென்றும் அவர் வம்சம் சந்திரவம்சமென்றும் வசிஷ்ட கோத்திரமென்றும் அவர்ரூபலாவண்ணியத்தில் மன்மதனைப்பெற்றெடுத்த மகா பிரகாச வைபவமுள்ள ஸ்ரீ மகாவிஷ்ணுவைப்போன்றவரென்றும் சொன்னாள். அதைக்கேட்ட தாணிதேவி மிகுந்த சந்தோஷத்துடன் பர்த்தாவுக்கு தெரிவிக்க அவரும் மகாபாக்கியமென்று சம்மதித்து விவாகத்திற்கு லக்கினம் ஏற்பாடுசெய்ய தன்குருவாகிய சுகமகரிஷியை வரவழைத்து கல்யாணபத்திரிகையை எழுதினார் அப்பத்திரிகையில் மஞ்சள்தடவி சுகரிடம் கொடுத்து அனுப்பித்தார். அதை சுகர் எடுத்துக்கொண்டுபோய் வேங்கடமலையின்பேரில் எழுந்தருளிய பரந்தாமன்கையில்கொடுக்க அவரதைப்படித்து வளர்பிறை தசமிராத்திரி சுபமுகூர்த்தத்திற்கு நாங்கள் இஷ்டஜனபந்துசமேதர்களாய் அவ்விடம வருகிறோமென்று எழுதி சு [illegible] கொடுத்தனுப்பிவிட்டார்.

## பத்மாவதி விவாக மகோற்சவம்.

இந்த செதி கருத்மந்தனும் தேவகோடிகளுக்குதெரிவிக்க பிரம்மதேவர் சாவித்திரி, காயத்திரி, ஸரஸ்வதிசமேதராய் அம்ஸவாகனமேரியும், பரமேஸ்வரர் பார்வதிசமேதராய் நந்திவாகன மேரியும், திக்பாலகர்களும், மகரிஷிகளும், தேவ கணங்களும், இந்திரன் சூரிய சந்த்ர முதலியவர்கள் திருவேங்கடமலைக்குவந்து சேர்ந்தார்கள். அப்பொழுது வசிஷ்டர் வராகஸ்வாமி சன்னதியில் எக்ஞ காரியங்களைச்செய்து வந்தார். பிரம்மதேவர் கல்யாணபீடத்தை நிர்மித்தார். பார்வதி முதலியவர்கள் ஸ்வாமிக்கு அப்பியங்கினம் செய்வதற்காக வரியையகூப்பிட அவர் லக்ஷ்மிதேவி விவாகத்திற்கு வராத குறையை தெரிவிக்க சூரியனை லோகமாதாவாகிய லக்ஷ்மிதேவியை அழைத்துக்கொண்டு வருவதற்கு கொல்லாபுரம்அனுப்பித்தார்கள். சூரியன் லக்ஷ்மியம்மனை அழைத்துக் கொண்டு வந்துசேர்ந்தான்.

## குபேரனிடம் கடன் வாங்குதல்.

கல்யாண சிலவுக்காக பணம்வேண்டுமே யென்றுசிந்தித்து பிறகு குபேரனிடம் 1 கோடி பதினான்குலக்ஷம் 1,1400000 பணம்வாங்கி அதற்கு வருஷந்தோரும் வட்டி கட்டும்படியாகவும் கலியுகம் முடிவில் அசலை கொடுக்கும்படியாகவும் பத்ரம் எழுதி அதற்கு சங்கரனும், பிரம்மாவும், சாக்ஷிகளாக, ஏற்பாடுசெய்யப்பட்டது. இதனால் வேங்கடேசப்பெருமாள் வட்டிகாசு பெருமாளென்று பேருள்ளவராய் பிரார்த்தனை மூலமாக ஜனங்களிடம் பணம் வாங்குவார்.

## ஸ்ரீ ஹரி நாராயணபுரம் சேருதல்.

அப்பொழுது அருந்ததி முதலிய ஸ்திரீரத்தினங்கள் சோபன பாட்டுகளைபாடமங்கள வாத்தியங்கள்சப்திக்கமகாலக்ஷ்மி

யும் பார்வதி சாவித்திரி சரஸ்வதி இந்திராணி முதலியவர்கள் ஆலாத்திஎடுக்க குமாரஸ்வாமி பாண்டவதீர்த்தம் முதல் ஸ்ரீசைலம் வரையிலும் இருக்கும் ஸ்தலத்தை பரிசுத்தம் செய்ய வாயுதேவனும் பிரம்மாவும் தேவேந்திரன் முதலிய சகல தேவகணங்கள்கூடி அவரவர்களுடைய வாகனங்கள் ஏறி ஸ்ரீஹரியுடன் புறப்பட்டு நாராயணபுரம்வர ஆகாசரா ஜன் மந்திரிபரிவாரங்களோடு எதிர்கோக்கிப்போய் அவர்களை அழைத்து விவாகமகோற்சவத்தை அதியற்புதமாக நடத்த சர்வதேவகணங்கள் புஷ்பவருஷங்களை அபாரமாக வருஷித் தார்கள். சொல்லமுடியாத வைபவத்துடன் விவாகமகோற்ச வம்நடந்தேற ஸ்ரீ வெங்கடேசப்பெருமான் பத்மாவதியுடன் கூடி தங்கமலையாகிய திருவேங்கடமலையை ச்சேர்ந்திருந்த வைபவத்துடன் கிரீடித்துக்கொண்டிருந்தார்.

## ஸ்ரீ பத்மாவதியின் பூர்வ விர்த்தாந்தம்

பூர்வத்தில் ஸ்ரீராமர் தன் தகப்பனை தசரதமகாராஜா வின் கட்டளைப்படி சீதாலக்ஷ்மணசமேதராய் காட்டிற்குப் போகையில் பொன்மானைக்கண்டு சீதை அது வேண்டுமெ ன ராமர் அந்தமானை துரத்திக்கொண்டுபோக இதுநல்லசமய மென்றறிந்து சீதாதேவியை இராவணன் எடுத்துஇரதத்தின் பேரில் வைத்துக்கொண்டு போகையில் சீதை இராமாவென் று அழ அதை அக்னிபகவான்கேட்டு இராவணனைப்பார் த்து நீ எடுத்துக்கொண்டுபோவது உண்மையானசீதையல்ல சீதாரூபத்தை உண்டாக்கி பிராம்மணகன்னிகையை ராமர் அவ்விடத்தில் நிருத்தினார் உண்மையான சீதை என்னிடம் விட்டுபோனாரென்று சொல்ல அந்தமூடன் நம்பி சீதாதேவி யைவிட்டு சீதையைப்போல் வேடம்பூண்ட வேதவதியை கொண்டுபோய்விட்டான். பிறகு இராமர் இலங்கைக்குப் போய் ராவணனைக்கொன்று சிறையிலிருந்த சீதையை விடுத

லசெய்து, நீ அக்கினியில் பிரவேசித்தாலொழிய உன்னை கைப்பிடியேனென அவ்விதமாகவே அக்கினியில் பிரவேசிக் கையில் இரண்டு சீதைகள் இருப்பதைக்கண்டு ராமர் ஜானகி தேவியைப்பார்த்து, அந்தவிபரத்தை சொல்லும்படி கேட்க சீதை அப்பொழுது விஸ்தாரமா சொல்லி தனக்காக ராவணன் சிறையில் அநந்த கஷ்டங்களை அனுபவித்த வேதவதியை விவாகம்செய்துகொள்ளும்படி பிரார்த்தித்தாள். ராமர் அதற்கு நான் ஏகபத்தினிவிரதனென்றும், கலியுகத்தில்பக்த ரக்ஷணை செய்வதற்குவெங்கடாசலத்தில்அவதரிப்பேனென்றும், அப்பொழுது இக்கன்னிகையை விவாகம் கொள்வேனென்று சொன்னாரானகையால் அந்த விப்ரகன்னிகை பத்மாவதியாய் பிறந்தாள்.

## ஸ்ரீ திருச்சானூர் மகத்துவம்.

அநேககாலம் ஸ்ரீவெங்கடாசலத்தில் பத்மாவதி தேவியுடன் கூடி கிரீடித்துக்கொண்டு இருந்தும் லோகமாதாவாகிய லக்ஷ்மியம்மன்மார்பில் இல்லாதகுறையினால் ஸ்ரீமகாவிஷ்ணு சிந்தையுள்ளவராய்ஸ்ரீலக்ஷ்மிதேவியை தேடவேண்டுமென்கிற உத்தேசம்கொண்டு பத்மாவதிக்கு சமாதானம்சொல்லி கொல்லாபுரத்திற்கு புரப்பட்டார். ஸ்ரீமகாவிஷ்ணு தன்னை தேட வருகிறாரென்றறிந்து, நேரில் ஸ்வாமிவந்து கூப்பிட்டால் வரமாட்டேனென்று சொல்லுவது மரியாதை யாகதென்றெண்ணி கொல்லாபுரத்தைவிட்டு பாதாளலோகத்தில் விசேஷ யோகமகிமையினால் பிரகாசித்துக்கொண்டிருக்கும் கபிலமாமுனியின் ஆஸ்ரமத்தை போய்ச்சேர்ந்தாள்

## ஸ்ரீ ஹரி தவம் செய்தல்.

பிறகு ஸ்ரீமந்நாராயணன் கொல்லாபுரத்திற்குபோய் லக்ஷ்மி காணாமல் போனதைப்பற்றி மிகுந்த விசனப்பட்டுக்

கொண்டு காடுமேடுகளும் குகைகளும் தேடி, மறுபடியும் கொல்லாபுரம்சென்று பூர்வத்தில் அகஸ்த்தியமாமுனி பூஜித்துத்துக் கொண்டிருந்த லக்ஷ்மிவிக்ரகத்தைப் பார்த்து மோகமடைந்து 10 வருடம் தவம்செய்துக்கொண்டிருந்தார் ஒருநாள் ஸ்ரீலக்ஷ்மியைநோக்கிசிந்தித்துக்கொண்டிருக்கையில் அசரீரவாணி அவரைப்பார்த்து இவ்விதமாகசொல்லத்தொடங்கினள், ஸ்வாமி நீர் இவ்விடத்தில் தெற்கில் கிருஷ்ணவேணி ஆற்றிற்கு அப்புரத்தில் சுவர்ணமுகி ஆற்றிற்குவடக்கில் சுகாஸ்ரமத்தில் நின்று தபவியாய் சுவர்க்கலோகத்திலிருந்து ஆயிரம் இதழ்களுள்ள தாமரைகமலங்களைவரவழைத்து திருகுளத்தைவெட்டி அதில் அவைகளை பிரகாசிக்கசெய்து வாடாமல் இருப்பதற்காக அக்குளத்திற்கு கிழக்கில் சூரியனை பிரதிஷ்டைசெய்து அந்தகமலத்தின்பேரில் திருஷ்டியைநிருத்தி மனதில் லக்ஷ்மிமந்திரத்தை தியானித்துக்கொண்டுதவம் செய்தால் லக்ஷ்மிதேவி பிரஸன்னமாய் உன்னை மருபடியும் அடையுமென்று சொல்ல அசரீரவாணி வாக்கின்படிக்கே அகஸ்தியாஸ்ரமம் தழியாய்ப்போம்சுகாஸ்ரமத்தை சேர்ந்து வாயுபகவானைதியானிக்க அவர் பிரஸன்னராய் அஞ்சலிபந்தராய் நிற்க யவரை ஸ்வாமிகண்டு ஓ மாருதி நீதேவலோகம் சென்று தேவேந்திரனைக்கண்டுமந்தாகினியிலிருக்கும்ஸ்ரேஷ்டமான பத்மங்களைக்கொண்டுவந்து தரவேணுமென வாயுதேவன் யவ்விதமாகவே கொண்டுவரயவரைப்பார்த்து இந்த ஸவிஸ்தாரத்தை யாருக்கும்தெரியப்படுத்த வேண்டாமென அப்படியே சம்மதித்து வாயுபகவான் மறைந்தார். பிறகு தன்கையிலிருக்கும்குந்தலாயுதத்தினல் ஒருகுளத்தைவெட்டியந்த தாமரை கமலங்களை யக்குளத்தில்விட்டுஇரவுபகலும் மலர்ந்திருக்கும்பொருட்டு கிழக்கில் சூரியநாராயணதேவா

லயத்லைத பிரதிஷ்டை செய்து பன்னிரெண்டு வருடம்ராஜனை ப்போல் வேடம்தரித்து தவம்செய்தார்.

## ரம்பாதிகள் ஹரியை சோதித்தல்

தேவேந்திரன் பூமியில் யாரோயாசன் கோரமான தவம்செய்து தன்னுடைய பதவிக்குவர யெண்ணுகிறானென்று சங்கையுள்ளவனாய் ரம்பா, ஊர்வசி, திலோத்தமை என்கிற தேவதாசிகளை தவத்தை பங்கப்படுத்தயனுபித்தான். அவர்கள் ஸ்ரீஹரி தவம் செய்யுமிடத்திற்குவந்து புஷ்பங்களை கொய்துக்கொண்டும் கிளிகளைப்போல் கலகலவென்று யேசிக்கொண்டும் பகபகவென்று சிரித்துக்கொண்டும் அநேகவிதங்களாக மாய்கைசெய்தார்கள். அதை ஸ்ரீஹரி தெரிந்துக்கொண்டு மந்தஹாஸராய் களிக்காமல் ஸ்வர்ண ஸஹஸ்ரதள பத்மத்தின்பேரிலே மனத்தை நிருத்திபிருந்தார். அப்பொழுது அக்காந்தாமணிகள் ஸ்ரீ ஹரியைமோகித்து அவர்பேரில்புஷ்பங்களை வீசியும், பரிஹாஸத்தோடு நகைத்துகொண்டும், நாட்யங்கள்செய்துகொண்டும் மனதைரமிக்கும்படியான பாட்டுகளைபாடிக்கொண்டும்வீணைகள் வாசித்துக்கொண்டு அநேக லீலாவினோதங்களைச்செய்தும் ஸ்ரீஹரிசலிக்காமல் இருக்கிறதைப்பார்த்து அலண்டு ஆச்சர்யமடைந்தார்கள்.

## ஸ்ரீஹருமோஹினிதேவதையைசிருஷ்டிசெய்தல்

ஸ்ரீமந்நாராயணன் அப்பொழுது மோகினிதேவதையை சிருஷ்டித்து தன்னிடம்மிருக்கும்படி கட்டளையிட்டார். ரம்பாதிகள் அந்த மோஹினிதேவதையின் ரூபலாவண்யங்களைப்பார்த்து வெட்கப்பட்டுதேவேந்திரனிடம்சென்று ஸ்வாமி, அவர் நரநல்ல சாக்ஷாத்நாராயணமூர்த்தியே என்பதற்கு சந்தேகமில்லையென்றுசொல்ல தேவேந்திரன்ஸ்ரீஹரியை நரனெனவெண்ணிபரிசோதித்தது அபசாரமென்று விசாரப்பட்டா

ன். பிறகு ஸ்ரீஹரிமோகினிதேவதையைப்பார்த்து நீ அங்க ங்கு பக்தர்களால் பூஜிக்கப்பட்டிருந்து, யதாகதியையடை வாயென்று சொல்லி அசையாமல் தவம்செய்துக்கொண்டிரு ந்தார்.

## லக்ஷ்மி கபில சம்வாதம்.

கபிலமாமுனிவரைப்பார்த்து லக்ஷ்மிதேவி தனக்காகஸ்ரீ ஹரி தவம்செய்கிறார்.என்னசெய்வேனென்று சிந்திக்கையில் கபிலமாமுனி லக்ஷ்மிதேவிக்குஸ்ரீஹரியின்பேரில் கோபமுண் டானதற்கு காரணமென்னவென்றுகேட்டு தெரிந்துகொ ண்டு இவ்விதமாகசொன்னார். என்னை பெற்றதாயே, பிள்ளை க்கு பிள்ளையாகிய பிருகுவின்பேரில்இவ்வளவுகோபம் உண் டாயிருப்பது நியாயமல்லமும்மூர்த்திகளைப்பரீக்ஷித்துஸ்ரீஹரி யின் பிரபாவத்தை ப்ரக்யாதிசெய்வதற்காக பிருகு அவ்வித மாய் நடந்தான். மேலும் ஸ்ரீஹரியை இவ்விதமாக கஷ்டப்ப டும்படிசெய்தும் உன்னைநோக்கி இவ்வளவு தவம்செய்யும்படி செய்வித்தும் பதிவிரதை களுக்குதர்மமல்ல, ஆகையா ல் தாயே நீஸ்ரீஹரிமனதை நிறுத்திருக்கும் கமலத்தில்தொட ர்ந்து மூலோகங்களும் முப்பத்து முக்கோடி தேவர்களும் மெச்சி கீர்த்தனைகள்பாட அந்தஎம்பெருமான் திருவக்ஷத்தில் சேர்வாய். நான்சொன்னது நியாயமானபடியால் மன்னிக்க வேணுமென லக்ஷ்மியம்மன் ஸ்ரீஹரியைவிட்டுவந்தது தன்னு டைய தப்பிதமென்றெண்ணி அந்தஜகதீசனை எம்பெருமா னை மறுபடியும் சேர நிச்சயித்தாள்.

## அலர்மங்காதேவியின் பிறப்பு.

ஸ்ரீஹரி மனதைநிறுத்திருக்கும் தாமரையின் வழியாக ஸ்ரீஹரி தவம்செய்த பதிமூன்றும்வருடத்தில் கார்த்திகைமா தம் சுத்தபஞ்சமி உத்திராடம் கூடிய வெள்ளிகிழமை சுபதி

ணத்தில் மகாசௌந்தர்யலாவண்ணிய யிரகாசத்தோடு பதி னாறுவயதுள்ள யவ்வனகன்னிகா ரூபத்தைதரித்த நாலுகைகளுடனும் கமலத்தையும் புஷ்பமாலையும் தரித்துக்கொண்டு பிரசன்னமாகையில் ஆகாயத்தில் பிரம்மாதி தேவர்கள் புஷ்பங்களை வருஷித்தார்கள். அப்ஸராஸாதி தேவதாஸிகள் வீணாதிகானநிருத்தியங்கள்செய்துஜெய ஜெய லக்ஷ்மி அலர்மங்காதேவியென்று கொண்டாடினார்கள்.

## லக்ஷ்மி ஹரியை அடைதல்.

லக்ஷிமியம்மன் பேசாமல் நிற்பதைப்பார்த்து பிரம்மாதிதெய்வங்கள் அந்த சுபலக்கினமே ஜெகதீசருடைய திருமார்பில் சேருவதற்கு நல்லகாலமென்று பிருகுவுக்குசைகை செய்தார்கள். அப்பொழுது பிருகுமுன்வந்து என்னைபெற்ற தாயே, நான்செய்த குற்றங்களை மன்னிக்க வேண்டும். சரணாகதன், கருணையெனும்கடலை உன்கண்களில்தரித்தகமலால் பாபெற்றதாயேசரணமெனன்றேனெந்த அகுற்றங்களாவற்றும் க்ஷமித்து காத்தருள்வாய் தரணியில் தான் பெற்றபிள்ளைகள் செய்திடும் தப்பிதம்தாயல்லவோ மரந்திட்டுசிறியேனைமன்னிக்க வேண்டுமதுமாத நீயரியாததோ. என்று சொல்ல லக்ஷிமி தேவிக்குஅநந்தசந்தோஷமுண்டாய்விட்டது. அப்பொழுது ஸ்ரீலக்ஷ்மியை, ஹரியை சேருமென்று பிரம்மாதி தேவகணங்கள், மலர்ந்திட்ட கமலத்தில் மங்கையாய் தங்கமாய் மாணிக்கமணியுமாயும் அலர்மேல்மங்கைதேவியென யனைவருங்கொண்டாட யகிலாண்டகோடியெல்லாம், கலகலென்றானந்த கடலிலே மூழ்கவே கருணையோடெங்கள்தாயே நிலமாக ஹரிமார்பில் நிலையாக குடிகொண்டுநின்று வாழ்ந்தருள்வாயெனஸ்தோத்திரம்செய்ய லக்ஷ்மி கையிலிருந்த பூமாலையை பகவான் கழுத்தில் தரித்து மறுபடியும் வக்ஷத்தில் சேர்ந்தாள்.

இவ்விஷயம் பத்மபுராணத்தில் அடியில்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது. இந்தபோதம் கல்பாந்திரவிவஸ்தையினால் ஏற்பட்டதென்றறியலாம். பிருகு மகாவிஷ்ணு மார்பை உதைத்தபோது லக்ஷ்மிதேவி பாதாளத்திற்குச்சென்று கபில மகாரிஷியால் பூஜிக்கப்பட்டு பிறகு கொல்லாபுரம்போய் வேங்கடன்மலைக்கு தென்பாகத்தில் சுவர்ணமுகி நதிதீரத்திலிருக்கும் சுகாஸ்ரமத்தில் ஏகாந்தமாய் வசித்துவந்தாள். வெங்கடேஸ்வரர் லக்ஷ்மிதேவியைத்தேடிக்கொண்டு அசரீரவாக்கினால் லக்ஷ்மிதேவி இருப்பிடம் தெரிந்து அந்தசுகாஸ்ரமத்திற்குச்சென்று தன் கையிலிருக்கும்குந்தலாயுதத்தினால் ஒருகுளத்தை நிர்மித்து தேவலோகத்திலிருக்கும் பத்மசரோவரத்திலிருந்து தங்கமயமான தாமரபுஷ்பங்களை க்கொண்டுவந்து அந்தகுளத்தில்போட்டு அந்தபுஷ்பங்கள் இரவும்பகலும் மலர்ந்திருக்கும்பொருட்டு அவ்விடத்தில் சூரியநாராயணதேவாலய மொன்றை பிரதிஷ்டைசெய்து பனிரெண்டுவருஷம் லக்ஷ்மி உபாசனைசெய்துக்கொண்டு லக்ஷ்மி மந்திரத்தைஜெபித்து தவம்செய்தார். பதிமூன்றாவதுவருடம் கார்த்திகசுத்த பஞ்சமி சுக்கிரவாரம் உத்திராநக்ஷத்திரதினத்தில் லக்ஷ்மிதேவி அலர்மேல்மங்கை அனேக தாசிஜனங்களுடன் சர்வாபரண பூஷிதயாய் ஆகாயத்தினின்று தேவதைகள்புஷ்பவருஷம் வருஷிக்க ரம்பைமுதலிய அப்ஸரஸ்திரீகள் நாட்டியமாட கந்தருவர்கள் கீதங்கள்பாட தாமரை புஷ்பத்தினின்று 16 வயதுள்ள யௌவனஸ்திரீயாக உற்பவித்து சுவாமியைக்கண்டு தான்கொண்டுவந்த நீலோத்பலபுஷ்பமாலையை சர்வலோக சரண்யராகிய அவர் கழுத்தில் சாத்தி ஆலிங்கனம்செய்துக் கொண்டு அவ்விடத்திலே இருக்கும்படியாக விரும்பினாள்.

## ஸ்ரீ திருச்சானூர் அலர்மேல்மங்காபுரம்.

ஸ்ரீலக்ஷ்மியம்மன் அவதரித்த தாமரைகுளமாகையால் இதற்கு பத்மசரோவரதீர்த்தமென்று பெயர் உண்டாயிற்று. ஹரிவக்ஷத்தில் லக்ஷ்மிபிரவேசித்த உடனே பிரம்ம ருத்திராதிகணங்கள் அந்த தீர்த்தத்தை அனேகவிதங்களாக கொண்டாடி தங்கள் சிரங்களின் பேரில் ப்ரோக்ஷித்துக்கொண்டார் ஆகையால் கார்த்திகைமாதத்துசுத்தபஞ்சமிதினத்தில்இந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தவர்கள் லக்ஷ்மி கடாக்ஷம் உள்ளவர்களாய் சகலசுகங்களை அனுபவிப்பார்கள்.

பத்மசரோவரமுள்ள இக்ஷேத்திரம் பத்மாராஜபுரமென்னும் கீழ்திருப்பதிக்கு 3 மைலில் இருக்கிறது. இதுசுகாஸ்ரமம் இதில் சுகர் குமாரனாகிய சாயாசுகர் வசிப்பதாக புராணசம்மதம் ஆகையால் இதற்க்கு திருச்சானூரென்றும் பெயர் உண்டாயிற்று பத்மத்தில் உண்டானபடியால் லக்ஷ்மிதேவிக்கு பத்மாவதிதேவதையென்றும் மலர்ந்த பத்மத்தில் நின்றதினால் அலர்மங்காதேவதை யென்றும் அந்த க்ஷேத்திரத்துக்கு அலர்மங்காக்ஷேத்திரமென்றும்பெயருண்டாயிற்று.ஸ்ரீமகாவிஷ்ணுவினாலபிரதிஷ்டைசெய்தசூரியதேவாலாயம் திருக்குளத்தின கரையின்பேரில் இருக்கிறது. ஸ்ரீசுகரால் ஏற்படுத்திய ஹலராமசமேத ஹரிவேணுகோபாலஸ்வாமி தேவாலயமும் இருக்கின்றது.ஸ்ரீசுந்தரவரதராஜப்பெருமாள் சன்னதியும் இவ்விடத்திலிருக்கின்றது.இந்தபுறத்திற்கு மேற்கில் யோகிமல்லவரம் என்று ஓர் சிறியகிராமம் இருக்கின்றது. பூர்வத்தில்தபோவந்தர்கள்சங்கம் சேரும்படியான இடம்புராணநிர்மிதமான சிவதேவாலயமும் இருக்கின்றது. 1 மைல் தூரத்தில் முனிகள் பூடியென்கிற கிராமம் இருக்கின்றது. பூர்வத்தில் முனிகள் ஆஸ்ரமங்களைக்கட்டிக்

கொண்டு தபோயக்கியங்கள் செய்தபடியால் இந்தபெயர் உண்டாயிற்று. திருச்சானூரில் பிரதிவருஷந்தோரும் கார்த்திகைமாதத்தில் 10 நாள் கற்பகவல்லியாகிய அலிமேலுமங்கைதேவிக்கு பிரம்மோற்சவம் பங்குனியில் 9 நாள் பத்மசரோவரதீர்த்ததிற் தெப்பல்உற்சவமும் பிரதிவெள்ளிகிழமை தோட்ட உற்சவமும் நடந்துவருகின்றது.

## ஸ்ரீ திருப்பதி பிரம்மோற்சவம்.

ஸ்ரீ வெங்கடேஸபெருமாள் அலிமேலுமங்கா தேவியை மார்பில் அணைத்து ஸ்ரீ திருப்பதி புண்ணியக்ஷேத்திரத்தில் நிற்க தன் குமாரனாகிய பிரம்மதேவர்வந்து ஸ்வாமி உங்களுக்கு ரதோற்சவம் நடத்தவேணுமென்றுவலுடையவனாய்இருப்பதால் உத்திரவளிக்க வேண்டுமென பிரார்த்திக்கையில் தன்புத்ரன் வர்க்கியங்களைக்கேட்டு ஆனந்தித்தவராய்சம்மதித்தார். பிரம்மோற்சவத்தை நடத்துவதற்காக நூதன ரதத்தை செய்யும்படி விஸ்வகர்மாவுக்கு உத்திரவுசெய்தார். அந்தரதம் முடிந்ததே முதல்நாள்சேஷ வாகனத்தின்பேரிலும் 2-வது நாள் அன்னவாகனத்தின்பேரிலும் 3-வது நாள் சிம்ஹவாகனத்தின்பேரிலும் அன்றைராத்திரி புஷ்பவாகனத்தின்பேரிலும் 4வது நாள் பூபாலஉற்சவமும் அன்றைஇராத்திரி கல்பகவிருக்ஷஉற்சவமும்5-வது நாள் ஆந்தோளி உற்சவமும அன்றைராத்திரிகருடோற்சவமும்6வதுநாள் அனுமந்தர்கள் உற்சவமும் அன்றைமாலை வசந்தோற்சவமும் இராத்திரி யானைவாகனோற்சவமும்7வதுநாள் காலையில் சூரியபிரபஉற்சவம் இராத்திரி சந்திரபிரபஉற்சவமும் 8வதுநாள் சோடச மகாதானகிருத்தியங்களை நடப்பித்து பிறகு தங்கயைப்போல் பிரகாசிக்கும் நவரத்தினகசிதமாய்அனேகவர்னங்களுடன் ஜொலித்துக்கொண்டிருக்கும் திவ்வியரதத்தின்பேரில் ஸ்ரீபூநீளா சமேதராகிய வெங்கடேஸப்பெருமானை ஆசனரு

டராகி அமர்த்தி பிரம்மாதிதேவ கணங்கள் நடப்பிக்க சகல திக்பாலர்களும் கருடகந்தர்வ கின்னரகிம்புருஷ சித்தவித்யா தரர்கள் சேவிக்க தேவதுந்துபிகள் கோஷிக்க மகா அற்புதமாக ரம்பா மேனகை ஊர்வசி திலோர்த்தமாதி தேவதாசிகள் அந்த ரதத்தின்பேரில் புஷ்பங்களை இரைத்து ஆடி பாடி ஹரியை கொண்டாடினார்கள். அப்பொழுது பக்தகோடிகள் ஹரிநாமத்தை ஸ்மரித்தார்கள். கவிகள் கீர்த்தனைகளைபாடினார்கள்.பண்டிதர்களும் பிராம்மணர்களும் உபநிஷத் வேதவாக்கியங்களை சாதித்தார்கள். பிராமணஸ்திரீகள்பாட்டுகளை பக்தியோடு சுவாமியைபாடி யாடி கொண்டாடினார்கள்.

அந்த ரதோற்சவத்தை பார்பதற்காக 56 தேசத்தரசர்களும் அவர்களுடைய வாகனங்களையேரி பரிவாரங்களுடன் வந்தார்கள். இவ்விதமாக அதுமுதல் புரட்டாசிமாதத்தில்உத்திராநக்ஷத்திரத்தில் பிரதிவருஷமும் ஸ்ரீவேங்கடேசபெருமானுக்கு பிரம்மோற்சவம் நடந்தேறிவருகிறது.

## திருச்சானூர் அலர்மேலுமங்கையம்மன் பிரம்மவுத்ஸவ கும்மி.

சித்திரம்போன்றமடமைமேலே
இந்த திருச்சானூர் வுத்ஸவத்தை
பத்தினி பெண்களா எத்திசைநீங்களும்
பாவையேபார்க்கலாம் வாங்களடி. 1
சுற்றிலும் பிராமணாள் வீடுகளமைத்து
நடுசிங்காரமானதோர் மண்டபமும்
எத்திசைபார்த்தாலும் சந்திரன் சூரியன்போல்
யேற்றிவைத்த தீபம் என்னசெய்வேன். 2

அங்கங்கே பஸ்திய ஸ்தானங்களும்
நல்ல ஆனைதோர் நாட்டிய பந்தங்களும்
எங்கும்பரவிய வெகுஜனகூட்டங்கள்
எந்தபடி நிற்குறார் பாருங்கடி. 3
பாருங்கடி சுற்றிவாருங்கடி நீங்கள்
பக்ஷமாயொன்றாகவே பாருங்கடி
கோரியமங்கையின் வுத்ஸவவேடிக்கை
எப்படி செய்தார் பாருங்கடி. 4
எத்தனையோவித பக்ஷிகளமைத்து
வத்தநகைகளை பூட்டிவிட்டு
முற்றிலும் அரசர் மெச்சிபுகழ்ந்ததோர்
பஞ்சமி வுத்ஸவ பாருங்கடி. 5
தங்கத்தினால்செய்த கருடவாஹனம்
பக்ஷமுடன் சித்திரவேலைசெய்து
எங்கும்பொருந்தவே நல்லபச்சைமாணிக்கம்
இட்டிழைந்ததை பாருங்கடி. 6
தேவர்கள் செய்ததோர் அனுமந்தவாஹனம்
பத்மாவதியேறும் வாகனமதும்
சந்தோஷமாகவே வந்ததோர் மங்கையின்
மேன்மையை சொல்லியே பாடுங்கடி. 7
வேடிக்கைபந்தலை பாருங்கடி
ஜனங்கள் எப்படி பேசுறார் பாருங்கடி
குளத்தைசுற்றி நாம்பார்த்தாலும்
பிரபுகள் கூட்டங்கள் எப்படிநிற்குறார் பாருங்கடி. 8
தங்கநிறமுள்ள பத்மாவதியம்மன்
தங்கபொருளுள்ள ஆடவளாம்
எங்கும்தேடிய அலமேலுமங்கையை
சேவித்து கும்பிடியுங்கடி.

ஆகாயவாணங்கள் தான்வெடிக்க
அப்போ அன்புடன் நக்ஷத்திரங்கள் போல்துலங்க
மேலானபாணங்கள் தான்வெடிக்க
அதை மெல்லிய நீங்கள் பாருங்கடி. 10
அன்னதானங்கள் செய்தார்கள் அன்று
ஆலயவுத்ஸவம் செய்தார்கள்
எண்ண வண்ணாக பஞ்சமிஸ்நானங்கள்
எப்படி செய்குரார் பாருங்கடி. 11
மீனாக்ஷியம்மன் கோவிலும்
காஞ்சி காமாக்ஷியம்மன் சன்னதியில்
மேலானகாசி ராமேஸ்வரத்தில்
மேலான திருச்சானூர் பாருங்கடி, 12
இருபத்திநான்கு ஜில்லாமுழுமையும்
அங்கங்கே வேடிக்கை தானமைத்து
வுலகம்புகழவே அலர்மேலுமங்கையை
சேவித்து கும்மியடியுங்கடி. 13
திருச்சானூர் அலர்மேலுமங்கைக்கு
செய்த பஞ்சமி வுத்ஸவத்தை
மிதமாய்பாண வேடிக்கை செய்துமே
சேர்ந்தமங்கையை பாருங்கடி. 14
சத்திய விஜயநகர கும்பகோணம்
சார்ந்த அண்ணாமலை க்ஷேத்திரத்தில்
எத்தனையோ பாணங்கள் செலவழித்து பக்தர்கள்
வுத்தமர் வாரதை பாருங்கடி. 15
தஞ்சைகுடந்தை மதுரை நகர்முதல்
இன்னும் பலபலவூர்களெல்லாம்
கன்னியமாகவே காசுசெலவிட்டு
பக்தர்கள் வருவதை பாருங்கடி. 16

சிலையுலகெங்கும் வேதியர்மார்களும்
திரந்த ஞானிகள் கூட்டங்களும்
நேயமாக மங்கையின் வுத்ஸவம்
நின்றுமே சேவித்து பாருங்கடி. 17
ஈசன் வயிக்கும் கைலாயகிரியைபோல்
எண்ணில்லாத திருச்சானூர் வேடிக்கையை
பூர்த்தியாய் செய்த பஞ்சமி வுத்ஸவத்தை
புகழ்ந்து கும்மியடிங்கடி. 18
மங்களமாகவே திருப்பதிவேடிக்கை
எங்கும் புகழ்ந்துமே தான்படிக்க
சிங்காரமாகவே கன்னைய்யநாயுடு
சொல்லி எழுதினான் பாருங்கடி. 19

## ஸ்ரீவேங்கடேஸ்வர சிங்காரகும்மி

### மஹிமைவிளங்கும் என்ற வர்னமெட்டு.

மஹிமைவிளங்கும் திருப்பதிநகர் வேங்கடேசமூர்த்தி
அவர்பேர் விளங்கும் கீர்த்திபோக்கும் பிரம்மமூர்த்தி
ஸ்வாமியின்பேரில் கும்மிபாட
சாரஸ்வதியம்மன் றுணையே 1
எங்கும்விளங்கும் ஏழுமலையின் இன்பமானக்ஷேத்திரம்
புஷ்காணி அமுர்ததீர்த்தம்
கருடோத்சவ பிரதக்ஷணம்
அவருடைய மகிமையும். 2
அழகான துவஜஸ்தம்பமும் சேர்த்தியானமண்டபமும்
அலர்மேலுமங்கையம்மாளுடைய கிருபையும்
மங்கையம்மாள் வுன்கிருபையே
ஜகத்திலெங்கும்புகழ. 3
தேவாதி தேவரெல்லாம் அவர்புகழ்நாட
நாலாயிரம்பாடவே தங்களைகொண்டாட

மங்கைபம்மாள் வுன்கிருபையே
ஜகத்திலெங்கும் புகழ. 4

சேஷாத்திரி மலையின்மீது ஸ்ரீனிவாசமூர்த்தி
புஷ்கரணியில் ஸ்நாநம் பண்ணுகிறநேர்த்தி
சகலபாபநிவர்த்தி
பக்திபண்ணினபேர்களுக்குமுத்திகொடுக்கும்மூர்த்தி 5

பாவாஜிமார்கள் கூடிக்கொண்டு போட்டார்களொரு
திட்டம்படிடய அளர்ந்து பார்த்தால் மட்டம்
வழியையழித்து கட்டினசட்டம்வேங்கடேஸ்வாருக்கு
இஷ்டம் சங்கையற்றபேர்கள்வந்து ஸ்நானம் பண்ணுகி
ற கூட்டம். 6

கருணையுள்ள மங்கையே என்கருத்தினி லிருப்பாயே
மாடவீதி வருகும்போது கண்ணாலே நான்கண்டேன்
பாததரிசனம் தன்னை காத்து ரக்ஷியும் என்னை
அந்தகாலத்தில் கைகொடுத்து அழைத்து போகசொ
ன்னேன். 7

பூமிகளுள்ள அதிகமான பூலோக வைகுண்டம் அவ
வர் மந்தகாணம் எங்கும்நிறைந்த திருமலையின்இன்பமரா
ணக்ஷேத்திரம் பாபநாச அமுர்ததீர்த்தம் அவனை கை
யைகூப்பி தரிசித்தவருக்கு கிடைக்குமேவைகுண்டம் 8

சீருடைனே பாடிடவும் யாவர்களும் புகழ்ந்து
கருணையுள்ளஸ்ரீவியாஸஅச்சுகூடத்தைகருத்துதனிலே
நினைத்து அருமையுள்ள பூதலத்தில் குதித்துபாடநீயே
பிரியமுடன் கன்னெய்யனை அருள்புரிவாய்தாயே 9

நைமிசாரணியவாசிகளான ருஷிகளானவர்கள் சூதபகவானைப்பார்த்துப் பூதபவிஷ்யத்வர்த்தமான காலங்களையும் புராணார்த்தங்களையும் உணர்ந்த ஸ்வாமி பூலோகத்திலுள்ள பர்வதங்களுக்குள் சிரேஷ்டமானபர்வத மெலவையென்று வினவசூதபகவான் ருஷிகளைக்கடாக்ஷித்துப் பூர்வகாலத்தில் கங்கைக்கரையிலேயான்வியாசரிடத்தில் கேள்விப்பட்டதை யுங்களுக்குச் சொல்லுகிறேன். அஃதென்னவென்றால் பர்வதங்களுக்குள் சிறந்ததாகவும் நவரத்னமயமாகவு மிராநின்ற மேரு பர்வதத்தை நாரதபகவானடைந்து அதிகவற்புதமாகவும் அனேகசூர்யர்கள்கூடி வெளிவிடுமோப்போலும் காந்தி பொருந்திபிராநின்ற ஒருதிவ்யவிமானத்தையும் அதற்கு உத்திரதேசத்தில் அதிக வுன்னதமான ஒருமூலைபில் நவரத்தினமயமாய்விளங்கும் ஒருபெரிய மண்டபத்தையும் கண்டு அதனுள்ளே பிரவேசிக்க அங்கோர் முக்தாலலங்கரித்த மண்டபமத்தியில் மின்னலைப்போல் ஒளிவிட்டு விளங்கும்மாணிக்கங்களால் இழைத்ததக்கவளவுள்ளவோர் சிம்ஹாஸனத்திலேபூரணசந்திரன்போன்ற திவ்யதிருமேனியையும் வராக திருமுக மண்டலத்தையும் சதுர்ப்புஜங்கசசக்ர மகரகுண்டலகிரீடாதி திவ்யாயுத திவ்ய பூஷணங்களையும் அபயஹஸ்தத்தையும் உடைத்தானவராய் எழுந்தருளி சேவை சாதிக்கும் புருஷோத்தமனான பூவராஹப்பெருமாளானவர் இந்திராதிலோகபாலகர்களாலும் கந்தருவ அப்சரச்கணங்களாலுஞ் சூழப்பட்டு சேவைவாய்த்திருககக்கண்ட நாரதரானவர் அருகிற்சென்று ஆனன்தபரவசராய் திவ்யமான உபநிஷத்வாக்யங்களினாலே ஸ்தோத்திரஞ் செய்துக்கொண்டிருக்குஞ்சமயத்திலே திவ்யமான வாத்தியங்களோடு தேவர்கள் ஸ்தோத்ரஞ்செய்யப் பூதேவியானவள் அந்தத்தாணிதாரரைசேவித்துக்கைகூப்பி அஞ்சலிஹஸ்தத்துடன் எதிரேநிற்க, அந்தவராஹப்பெருமானும்

அந்தபூதேவியை யாலிங்கனஞ்செய்து தம்மடியிலே யுட்கார வைத்துக்கொண்டு குசலங்கேட்டு வாராய் பூதேவியே ஆதிசேஷனுடைய சிரசிலே யுன்னைத்தாங்கவைத்து உனக்குச் சஹாயமாக அனேகபர்வதங்களை துணையாகவைத்துக்கூட்டி நான்சுமந்துகொண்டு வந்தேனே யுனக்கென்னகுறையுளது என்று வராஹபெருமாளானவர் வினவ, அதற்கு ப்பூமாதேவியானவள் ஸ்வாமீதேவரீர் அடியேனைப்பாதாளததில்நின்றும் எடுத்து ரத்னசிம்ஹாசனம்போன்ற உன்னதமாய்மாணிக்கமயமா யிருக்கும் ஆயிரஞ்சிரசுகளுள்ள ஆதிசேஷன் சிரங்களின்மீது அடியேனைப் பூமியாகவைத்தும் தேவரீர்கிருபையே. அஃதெப்போதும் ஸ்திரமாயிருக்க கிருபைசெய்தருளவேண்டும், தேவரீரைவிடவடியேனை ரக்ஷிக்கின்றவர்களொருவருமில்லை, ஆகையால் தேவரீரேயடியாளை ரக்ஷித்தருளவேண்டும் அன்றியிலும் பர்வதங்களுக்குள் சிறந்துள்ள பர்வதங்களை அடியேனுக்கு ஆதாரமாகக்செய்யவேண்டுமென்ன, அப்படியே யாககடவதென்று கிருபைகூர்ந்து வாராஹபெருமாளும் பூபிராட்டியைக்கடாக்ஷித்து அவள்கேட்டவண்ணம் அவளுக்காதாரமாயுள்ள பர்வதங்களை முறையாயருளிச்செய்கின்றார், வாராய் பூதேவியே, சுமேருவென்றும், ஹிமவானென்றும், விந்தியபர்வதமென்றும், அந்தாபர்வதமென்றும், கெந்தமாதனபர்வதமென்றும், சாளக்கிராமமென்றும், சித்ரகூடமென்றும், மால்யவானென்றும், பாரியாத்திரகமென்றும், மஹேந்திரபர்வதமென்றும், மலையபர்வதமென்றும், சிம்ஹாத்திரியென்றும், மேருபுத்ரனென்றும், அஞ்சனபர்வதமென்றும், ஸ்வர்னகிரியென்றும், கீர்த்திபர்வதமென்றும், கடிகாசலமென்றும், சொழ்லும்படியான பர்வதங்களெல்லா முனக்கு ஆதாரமாகவிருக்கின்றன வாராய்பூதேவியே இன்னமொரு விருத்தாந்தத்தைச் சொல்லுகின்றேன், ஹஸ்திகிரிக்கு உத்திர

பாகத்திலே ஐந்து யோசனை தூரத்தில் ஸ்வர்னமுகியென்று ஓர் நதி யிருகின்றது, அதற்கு உத்திரபாகத்திலே கமலமென்று பேர்வழங்கும் ஒருபெரிய சரசு இருக்கின்றது. அந்ததீரத்திலே சுகமேருக்கு அனேகவரங்களைக்கொடுக்கும் கிருஷ்ணபகவான் சக்தர்களின் பாபங்களைப் போக்குமவராய்பலராமரோடுகூட யெழுந்தருளியிருகின்றார், அங்குஸ்ரீவேங்கடகிரியென்னும் நாமமுடையதாயும் வசுதேவனுக்கு வாசஸ்தானமான தாயுமிராநின்ற வந்தசேஷாசலத்திலே யனேகதிவ்யமான சரசுக்களுண்டு அவைகளிற்சிரேஷ்டமான ஸ்வாமிபுஷ்கரணியின் பச்சிமபாகத்திலேஉன்னுடன்வாசம்பண்ணுகின்றேன் அதற்குக் தக்ஷிணபாகத்திலே ஜகத்துக் கதிபதியாயிருகின்ற ஸ்ரீநிவாசனெழுந்தருளியிருக்கின்றார். அந்தபர்வதத்தை கிரேதாயுகத்திலே நாராயணாத்ரி என்றும், துவாபரயுகத்திலே நரசிம்ஹாத்திரியென்றும், கலியுகத்திலே ஸ்ரீவேங்கடாத்ரி யென்றும், அவைபரமாத்மாவின் வாசஸ்தானமென்று பெரியோர் சொல்லுவார்கள்,யாதாமொருவர் அந்தத்திருமலையின் திக்கைநோக்கி பக்திபரவசராய் சேவிக்குமவர்களுக்குச் சமஸ்தபாபங்களையும் போக்கி விஷ்ணுலோகத்தையுங் கொடுக்கும், வாராய்பூதேவியே அந்தத்திருமலையிலேயுள்ள தீர்த்தங்களுள் ஆறுதீர்த்தங்களின் வைபவத்தையும் ஸ்நான காலங்களையுஞ் சொல்லுகின்றேன். என்னவென்றால் அதில் லோகபாவனமா யிருகின்ற குமாரதாரகையின் தீர்த்தத்தில் பார்வதியின்பிள்ளையான சுப்ரம்மண்யன் ஸ்நானம் பண்ணி தபசுசெய்து சேனாபத்யத்தையடைந்த அந்தத்தீர்த்தத்தில் மாசிமாதமகநக்ஷத்திரம் பௌர்ணமியோடுகூடிய மத்தியானகாலத்தில் ஸ்நானம் செய்யுமவர்களுடையும் புண்யபலன் என்னவென்றால் கங்கைமுதலான தீர்த்தங்களிலே பன்னிரெண்டு வருஷம் நியமத்துடன் ஸ்நானஞ்செய்து

அடையும்பலன் அவ்வளவையும் அந்தத் தீர்த்தஸ்நானம் கொடுக்கும் பங்குனிமாதப் பௌர்ணமியோடுகூடிய உத்திர நக்ஷத்திரத்தில் சாயங்காலவேளையிலே இந்தபர்வதத்தின் குகையிலுள்ள தும்புருதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்யுமவர்களுக்குப்புனர்ஜன்மமில்லை, சித்திரைமாதம் சித்திரைநக்ஷத்திரத்தில் கூடிய பௌர்ணமியில் பிராதக்காலத்தில் ஆகாசகங்கையிலே ஸ்நானம் செய்கிறவர்களுக்கு மோக்ஷமுண்டாம், வைகாசிமாத விசாகநக்ஷத்திரத் துவாதசி ஆதிவார சுக்லபக்ஷத்திலாவது கிருஷ்ணபக்ஷ மங்களவாரத்திலாவது பாண்டுதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்கின்றவர்களுக்கு இஹபர சம்பத்துண்டாகும், பாபநாசதீர்த்தத்திலே சுக்லபக்ஷத்திலாவது கிருஷ்ணபக்ஷத்திலாவது சப்தமி ஆதிவாரம் பூசநக்ஷத்திரம்கூடியிருந்தாலும் ஹஸ்தநக்ஷத்திரம் கூடியிருந்தாலும் அக்காலத்தில் அதில் ஸ்நானஞ் செய்கின்றவர்களுக்கு அனேக ஜன்மங்களிலுண்டான பாபங்களெல்லாம் விமோசனமாகும், என் சந்நதிக்கு வாயவ்யத்திலே ஒரு சிகரத்தின் குகையிலேயே அதிசோபனமாயிருக்கின்ற தேவதீர்த்தமென்றொரு தடாகமிருக்கின்றது அதிலே குருவாரம் பூசநக்ஷத்திரம் வியதீபாதத்திலும் சோமவாரம் திருவோணநக்ஷத்திரம் இப்படிகொத்த தினங்களில் ஸ்நானஞ்செய்கின்றவர்களுக்கு ஞானத்திலாவது அஞ்ஞானத்தினாலாவது வரும்பாபங்களைப் போக்கி புண்யபலன்களை கொடுக்குமென்று வராஹரூபியான பகவானானவர் பூதேவிக்கு அருளிச்செய்ததைத்தெரிந்த நாரதரானவர் வியாசருக்குரைக்க வியாசர் சூதபகவானுக்கு சொல்ல சூதபகவான் ஸௌனகாதிகளுக்குரைத்தனர். இந்தப்பிரகாரம் வராஹபெருமாள் ரஹஸியமாயிருந்த தீர்த்தத்தின் பிரபாவங்களைச்சொல்லக்கேட்ட பூதேவியானவள் மிக்கபரவசியாய் ஸ்தோத்திரஞ்செய்து வராஹப்பெருமாளை காடாலிங்கனஞ் செய்து

கொள்ள, இப்போது வராஹப்பெருமாளும் சந்தோஷித்தவ ராய் பூதேவியை வலதுதொடையிலே வைத்துக்கொண்டு கருடாரூடராய்ச் சேஷாசலத்தையடைந்துஸ்வாமிபுஷ்கரணியின் பச்சிமபாகத்திலே ருஷிகள் ஸ்தோத்திரஞ்செய்ய வெழுந்தருளியிருந்தார், என்று அந்த ரஹஸியமான வ்ருத்தாந்தத்தைக் குருவான கிருஷ்ணத்துவைபாயனர் என்னும் வியாசராலே சூதபகவானறிந்து சௌனகாதி ருஷிகளுக்குச்சொல்லி பின்னும் இந்த ரஹஸியார்த்தங்களைப் பிரம்ஹவித்துக்கள் வாசிக்கக்கேட்கின்றவர்கள் சர்வாபீஷ்டபலனையும் பெறுவார் களென்று வியாசர் அருளிச்செய்தாரென்று சூதர்சொல்லக்கேட்ட ருஷிகள், ஸ்வாமி, வராஹப்பெருமாளானவர் பூதேவியுடன் அந்தக்கிரீடாசலத்தை அடைந்தபின்னர் என்ன திருவிளையாடல்களைச்செய்தருளினார் அவைகளை எல்லாம் அடியேங்களுக்கு நன்றாக அருளிச்செய்யவேண்டுமென்று கேட்டார்கள்.

அந்தபிரகாரம் வராஹபுராணத்தில் பூகோள உபாக்கியானத்தில் ஸ்ரீவேங்கடகிரி மஹாத்மியத்தில் தரணீவராஹ சம்வாதத்தில் திருமலையானது நான்குயுகத்திலும் நான்கு திருநாமங்களைக்கொண்ட விருத்தாந்தத்தையும், 6, தீர்த்தங்களின் வைபவ விபரத்தையும் சுப்ரம்மண்யதேவன் தபசுசெய்து சேனாபத்யத்தை யடைந்த வரலாற்றையுங் கேட்குமவர்கள் சகலசம்பத்தையும் பெறுவார்கள்.

## ஸ்ரீ திருமலை திருப்பதி ஸ்தலங்களில் ஆர்ஜித உத்ஸவங்களுக்கு செலுத்தவேண்டிய கட்டண விவரம்.

| நெ. | விவரம். | | | கட்டவேண்டிய ரூ. | |
|---|---|---|---|---|---|
| 1 | பூலங்கி தரிசனம் | .... | .... | 1 | 0 |
| 2 | பூலங்கி சேவை | ... | .... | 60 | 0 |
| 3 | புளிகாபு தரிசனம் | ... | .... | 1 | 0 |
| 4 | புளிகாபு சேவை | ... | .... | 450 | 0 |
| 5 | கர்பூரகிண்ணி | .... | .... | 250 | 0 |
| 6 | புனுகுசட்டம் கிண்ணி | .... | ... | 85 | 0 |
| 7 | கஸ்தூரி கிண்ணி | .... | .... | 50 | 0 |
| 8 | ஜபாராகிண்ணி | .... | .... | 65 | 0 |
| 9 | ஸஹஸ்ரகலசாபிஷேகம் | .... | .... | 1005 | 0 |
| 10 | பூரா திருப்பாவடை | .... | .... | 1105 | 0 |
| 11 | பாதி திருப்பாவடை | .... | .... | 555 | 0 |
| 12 | கொவிலாழ்வார் திருமஞ்சனம் | | .... | 505 | 0 |
| 13 | ஆமந்திரோத்ஸவம் | .... | ... | 100 | 0 |
| 14 | அயினமஹல் சேவை | .... | .... | 61 | 0 |
| 15 | தோமாலை சேவை | .... | .... | 13 | 0 |
| 16 | ஏகாந்தசேவை | .... | .... | 13 | 0 |
| 17 | துளசி அர்சனை | .... | .... | 7 | 0 |
| 18 | ஆவத்தர்ஜா பிரம்மோத்ஸவம் | | .... | 1205 | 0 |
| 19 | இரண்டாவது தர்ஜா ஷை | | .... | 925 | 0 |
| 20 | மூன்றுவது தர்ஜா ஷை | | .... | 805 | 0 |
| 21 | நான்காவது தர்ஜா ஷை | | .... | 705 | 0 |
| 22 | ஐந்தாவது தர்ஜா ஷை | | .... | 625 | 0 |
| 23 | வசந்தோற்சவம் ஷை | | .... | 1105 | 0 |

| | | | |
|---|---|---|---|
| 24 | கல்யாண உத்ஸவம் ஷை .... | 305 | 0 |
| 25 | வஜ்ஜிர கவசம் சஹ சர்வ பூபால வாஹனம் | 61 | 0 |
| 26 | ஷை கல்பவிருக்ஷ வாஹனம் | 61 | 0 |
| 27 | வஜ்ஜிரகவசமில்லாமல் சர்வபூபாலவாஹனம் .... மாத்திரம் | 41 | 0 |
| 28 | ஷை கல்பவிருக்ஷவாஹனம் | 41 | 0 |
| 29 | பெரியசேஷவாஹனம் .... | 41 | 0 |
| 30 | சூரியபிரபை வாஹனம் .... | 41 | 0 |
| 31 | பாலகி வாஹனம் .... .... | 41 | 0 |
| 32 | புஷ்பரதம் .... ... | 41 | 0 |
| 33 | முத்து பந்தல் .... ... | 41 | 0 |
| 34 | கருடவாஹனம் .... ... | 21 | 0 |
| 35 | ஹனுமந்த வாஹனம் .... ... | 21 | 0 |
| 36 | சின்னசேஷவாஹனம்.... ... | 21 | 0 |
| 37 | சந்திரபிரபை .... ... | 21 | 0 |
| 38 | ஆனை வாஹனம் .... .... | 21 | 0 |
| 39 | குதிரைவாஹனம் .... .... | 21 | 0 |
| 40 | சிங்கவாஹனம் .... .... | 21 | 0 |
| 42 | வெள்ளி திருச்சி .... .... | 21 | 0 |
| 43 | ஹாரதி .... .... | 1 | 0 |

## பிரஸாதங்க்ள் திருபணியாரங்கள் கட்டண விவரம்.

| | | | |
|---|---|---|---|
| 0 | பொங்கல் தளிகை .... | 40 | 0 |
| 2 | சக்கரை பொங்கல் தளிகை .... | 45 | 0 |
| 3 | புளியோரை தளிகை .... | 35 | 0 |
| 4 | ததியோதனம் ஷை .... | 30 | 0 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5 | வீரா | ஷை | .... | .... | 85 | 0 |
| 6 | கேஸரிபாத் | ஷை | .... | .... | 65 | 0 |
| 7 | சாகரபாத் | ஷை | .... | ... | 65 | 0 |
| 8 | பாயஸம் | | ... | ... | 45 | 0 |
| 9 | சக்கரை லட்டுபொடி | | ... | ... | 65 | 0 |
| 10 | ஜிலேபிபொடி | | ... | ... | 80 | 0 |
| 11 | வடை, மனோஹரம், அப்பம், போளி, தேங்குழல், சுசியன் வொவ்வொன்றுக்கு | | | ... | 60 | 0 |
| 12 | தோசை ஊறுகாய், பச்சடியுடன் | | | ... | 5 | 0 |

## திருமலையில் சுவாமியின் பிரம்மோத்ஸவம் 10நாள் நடக்கும் அதின் விவரம்.

முதல்நாள்:—அங்குரார்பணம் ஸ்ரீசேனாதிபதி உத்ஸவம். (ராத்திரி)

இரண்டாம்நாள்:—துவஜாரோஹணம் சுவாமிக்குவஜ்ஜிரகவசத்துடன் பொன் திருச்சியில் சாயங்காலம் வுத்ச்வம் இராத்திரி பெரியசேஷவாஹனம்

மூன்றுநாள்:—பகல்சேஷவாஹனம் இரவு ஹம்ஸவாஹனம்.

நாலாவதுநாள்:—பகல் சிம்ஹவாஹனம்இரவுமுத்துபல்லக்கு

ஐந்தாவதுநாள்:—பகல் கல்பவிருக்ஷம் இரவு சர்வபூபால வாகனம்.

ஆறாவதுநாள்:—பகல் மோஹினி அவதாரம் பல்லக்குஉற்சவம் இரவு பெரிய கருடவாகனம் ஸ்ரீலக்ஷ்மி ஹாரம் மகரகண்டி வகைராவிசேஷ திருவாபரணங்களுடன் சுவாமி அலங்காரம்.

ஏழாவதுநாள்:—பகல் அநுமந்தவாகனம் சாயங்காலம் வசந்தோற்சவம் இரவு யானைவாகனம்.

எட்டாவதுநாள்:—பகல் சூரியபிரபை இரவு சந்திரபிரபை
ஒன்பதாவதுநாள்:—பகல் திருத்தேர் இரவுகுதிரைவாகனம்
பத்தாவதுநாள்:—(1) பல்லக்குஉற்சவம், (2) பூர்ணாபிஷேக மென்றும் திருச்சி உற்சவம்இந்த இரண்டுஉற்சவங்களும் அதிகாலையில் நடக்கும் பிறகு தீர்த்தவாரி இராத்திரி துவஜாவரோகண உற்சவம் பெரிய திருச்சியில் பெருமாளுடைய நாச்சியாருடன் வஜ்ஜிர கவசம் வலகரு திருவாபரணத்துடன் உற்சவம்.

## திருமலையில் பிரதிதினம் சுவாமியின் சேவை விவரம்.

காலையில்6மணிமுதல் 7மணிக்குள் விஸ்வரூபதரிசனம் எல்லாருக்கும் தர்மசேவை. 9 மணிக்கு தோமாலைசேவை இதற்காக ரூ. 13—0—0 செலுத்திடிக்கெட்டு வொன்றுக்கு 2 பேர் சுவாமிசேவைக்கு போகலாம். 10 மணிக்கு சுவாமியின் கொலுவு பொன் வாசற்படிக்கி முன்பாக வெள்ளிநாற்காலியில் யெழுந்தருளிசெய்து பஞசாங்கம்படிப்பது, வெகு விநோதமானசேவை எல்லாரும்பார்க்கலாம். பிறகு சுவாமிக்கு துளசி அர்ச்சனை, அர்ச்சனை 1-க்கு ரூ. 7—0—0 செலுத்தி ரசீதுபெற்றுக்கொண்டால் 4 பேர்சேவைக்கு விடுவார்கள். 11 மணிக்கு சுவாமிக்கு ஆராதனை பிறகு தர்மசேவை. இரவு 7 மணிக்கு சுவாமிக்கு ஆராதனை பிறகு தர்மசேவை. ஏகாந்தசேவை மேல்சொல்லிய தர்மசேவையானவுடன் ஏகாந்தசேவை இதற்கும் டிக்கெட்டு வாங்கவேண்டும்,ஒவ்வொரு டிக்கெட்டுக்கு 5பேர்சேவைக்கு போகலாம்

பிரதி வியாழக்கிழமைதினம் இரவு தர்மசேவை கிடை

யாது. அன்றையதினம் இரவு பூலங்கி சேவைக்காக டிகட்டு 1-க்கு ரூ. 1. வீதம் செலுத்தி டிகட்டு பெற்றுக்கொண்டால் சேவைக்கு விடுவார்கள் மருநாள் வெள்ளிகிழமை காலையில் அபிஷேகமாதிரி பூலங்கியுடன் விஸ்வரூபசேவை இதற்கும் டிகட்டு 1-க்கு ரூ. 1 வீதம் செலுத்தி வாங்கினவர்களை தான் செவைக்கு விடுவார்கள். வெள்ளிகிழமைபகல் திருமஞ்சனம் இதற்கும் டிகட்டு 1-க்கு ரூ. 1 வீதம் செலுத்தி டிகட்டு வாங்கினவர்கள்தான் ஷை சேவைக்கு போகலாம் இன்னும் மற்ற விவரங்களுக்கு நேரில் தெரிந்துக்கொள்ளலாம்.

திருப்பதி ஸ்ரீ கோவிந்தராஜ சுவாமி சன்னதியிலும் முன் சொன்னபடியே சேவை கிடைக்கும்.

யாத்திரார்த்திகள் தங்குமிடம்.

திருப்பதியில் வாடகையில்லாமல் கிடைக்குமிடம்.

1 தேவஸ்தானம் பூந்தோட்டசத்திரம். 2 அத்திராப்ஜீமடம் தர்மசாலை. 3 மைசூர் மஹாராஜா சத்திரம். 4 நரா அவர்கள் சத்திரம். 5 பங்களூரார் சத்திரம். 6 ரெயில்ஸ்டேஷனருகில் ராமசாமி நாயுடு சத்திரம்.

இவைதவிர புது தெருவில் சென்னை தேவகி வெங்கட கிருஷ்ணம்செட்டி கங்கிபாடி சம்பத்துசெட்டியார் இவர்கள் கட்டிய சத்திரத்தில் வைசியர்களுக்கும் இடம் கிடைக்கும்.

திருமலையில் தேவஸ்தானம் 1000 கால் மண்டபத்திற்கு திவாணம் என்னுமிடத்திலும் பீட்டாபுரம் ராஜா அவர்கள் சத்திரத்திலும் அத்திராமஜீ மடத்திலும் (பாவாஜீ அவர்கள் சத்திரம்) மைசூர் மஹாராஜர்கள் சத்திரத்திலும் சௌகரியமாக இடம்கிடைக்கும் சௌராஷ்டிரர்களுக்கு திருமலையில் மேலண்ட மாடவீதியிலும் திருப்பதியில் ஸ்ரீ ராமசுவாமி சன்னிதி தெருவிலும இடம் கிடைக்கும்.

அலமேல்மங்கை புரமென்னும் திருச்சானூரில் ஸ்ரீ பத்

மாவதி அம்மனுடைய தேவஸ்தானத்தின் சேவைவிவரம்.

| | | ரூ | அ |
|---|---|---|---|
| 1 | ஸஹஸ்ர நாம அர்ச்சனை | 5 | 0 |
| 2 | கருடவாஹனம் | 21 | 0 |
| 3 | ஆனைவாஹனம் | 21 | 0 |
| 4 | வெள்ளி திருச்சி | 5 | 0 |
| 5 | ஹாரதி | 0 | 4 |
| 6 | அஷ்டோத்திர அர்சனை | 0 | 8 |

பிரதிவருஷம் கார்த்திகைமாதத்தில் பிரம்மோற்சவம் 10 நாள் வெகுவிமரிசையாக நடக்கும் பத்தாவது நாள் தீர்த்தவாரி பஞ்சமி தீர்த்தமென்று மிகவும் விசேஷமானது, மேற்படி பஞ்சமி தீர்த்தத்துக்காக வெகு தூரத்திலிருந்து ஜனங்கள் விசேஷமாக வருகிறார்கள், பங்குனி மாதத்தில் தெப்போற்சவம் வெகு அழகான தெப்பத்தில் ஒருவாரம் நடக்கும் அதில் முதல் நாள் ஸ்ரீ கண்ணனுக்கும் இரண்டாவதுநாள் ஸ்ரீ சுந்திரராஜ சுவாமிக்கும் 1, 4, 5 நாளில் ஸ்ரீபத்மாவதி யம்மனுக்கும் 6-ம் நாள் திருப்பதி ஸ்ரீ கோவிந்தராஜருக்கும், 7-ம் நாள் திருப்பதி ஸ்ரீ ராமருக்கும் வெகு வைபவத்துடன் நடக்கும். இந்த மாதிரி தெப்பல் வேறெங்கும் கிடையாது, அவசியம் பார்க்கத்தகுந்தது.

## ஸ்ரீ திருப்பதி தீர்த்தங்களின் விபரம்.

நாரததீர்த்தம்:- ஒருநாள் பிரம்மதேவருடைய குமாரனாகிய நாரதமாமுனி பகவதாராதனை செய்ய எண்ணங்கொண்டு ஸ்ரீ வெங்கடாசல புண்ணியக்ஷேத்திரத்துக்குவந்து அநாதியாயிருந்த ஓர் தீர்த்தத்தில் ஸ்நாநம்செய்துக்கொண்டு ஸ்ரீலக்ஷ்மி சமேதனான எம்பெருமானை நோக்கி தவம்செய்ய அவர் பிரத்யக்ஷமாய் உனக்கு என்னவரம்வேணுமென்றும் தான் நீராடினதீர்த்தம் தன்போல் விளங்கவேணுமென்று கேட்டார்,

கிருஷ்ணதீர்த்தம்:—பூர்வத்தில் கிருஷ்ணன் என்கிற ஒரு பிராமணன் ஸ்ரீவெங்கடேச பெருமாளை தரிசிக்க எண்ணங்கொண்டு வேங்கடாசலம் சென்று ஒரு குளத்தையுண்டாக்கி அதில்ஸ்நானம்செய்து ஏகமனதுடன் வெங்கடேச பெருமாளுடைய திருப்பொற்பாதங்களைநினைத்துதவம்செய்தான் வெகுகாலம் அவ்விதம் தவம்செய்வதினால் அவரின்மீது புற்றுஉண்டாயிற்று. தேவேந்திரன் அவர்தவத்தை பங்கபடுத்த மேகாதனை அநுப்பி அபாரமான வருஷங்களை பெயும்படி செய்தார். அப்போது புற்று கரைந்துபோக வெங்கடேச பெருமாள் சங்குசக்ரங்களுடன் லக்ஷிமிசமேதராய் கருடவாகனாரூடராய் வர அவருக்கு பிரதக்ஷிண நமஸ்காரங்கள்செய்து நித்தியமும் உங்கள் பாதசேவை கிடைக்கவேணுமென்றும் அந்ததீர்த்தம் தன்னாமத்தால் விளங்கவேணுமென்றும் கேட்டுக்கொண்டான்.

சக்கிறதீர்த்தம்:—ஓர் பிராமணன் வெங்கடேச பெருமாளுடைய அருளுக்கு ஆளாகவேணுமென்று எண்ணி வெங்கடாசலம் சென்று ஓர் குளத்தையுண்டாக்கி அதில் ஸ்நாநம்செய்துக்கொண்டு தவம்செய்ய சுவாமிபிரத்யக்ஷமாய் நீ இன்னும்சிலகாலம் இத்தீர்த்தத்தில் ஸ்நானம்செய்து என்னை தியானித்துக் கொண்டிருந்தால் சாலோக்ய முக்தியடைவாயென்று உத்திரவுயளித்தார். அதன்படிக்கே நடந்துக்கொண்டுவர ஓர் ராக்ஷஸன் அவரைதுரத்த அந்த பிராமணன் சுவாமியைநோக்கி சிந்திக்க பரந்தாமன் தன் சக்கிரத்தினால் அந்த ராக்ஷஸனைக்கொன்று பக்தகோடிகளை இரட்சிக்கும்பொருட்டாக அத்தீர்த்தத்திலேயே சக்கரத்தை இருக்கும்படி கட்டளையிட்டார்.

## ஸ்ரீ திருப்பதி தீர்த்தமகத்துவம்.

ஆகாசகங்கை தீர்த்தம் வெங்கடேஸ்வரருடைய ஆல

யத்திற்கு 2மைல் தூரத்திலும் பாபவிநாசதீர்த்தம் வடக்கில் 3 மைல் தூரத்திலும் பாண்டவதீர்த்தம் 1 மைல் தூரத்திலும் இருக்கின்றன. அதன் சமீபத்தில்கோகர்பதீர்த்தமும் ஆகாசகங்கைக்குசமீபத்தில் ஜாபாலிதீர்த்தமும் பாபவிநாசனத்திற்கு சமீபத்தில் கனகநந்தனதீர்த்தமும்இருக்கின்றன. ஆலயத்திற்கு 8 மைல் தூரத்தில் குமாரதீர்த்தமும் 15 மைலில் தும்புருதீர்த்தமும் 8 மைலில் ராமகிருஷ்ணதீர்தமும் மேற்கில் நாரததீர்த்தமும் இருக்கின்றன. ஆலயத்திற்கு 2-வது பிராகாரத்தில் தொட்டிதீர்த்தம் இருகின்றது,அதை பிரதிசுக்கிரவாரம் சுவாமி அபிஷேகத்திற்குவுபயோகிக்கிறார்கள். விரஜாநதி தீர்த்தம் என்பது மூன்றாவது பிரதக்ஷணத்திலிருந்து சுவாமிபாதங்கள் வழியாக பாய்கின்றது யிந்ததீர்த்தம்தேவேந்திரன் கவிதமருடைய சாபவிமோசனத்திற்காகதவம்செய்தபிடம் ரசாயணதீர்த்தம் என்பதுமகான்களுக்கேகாணப்படும். இந்த தீர்த்தங்களிலும் புஷ்கரணியிலும் மார்கழிமாதம் வளர்பிறை துவாதசி சூரியவுதயத்தில் ஸ்நானம்செய்வது மிகவும் மங்களசுபங்கள் உண்டாகின்றன.

## திருப்பதிக்ஷேத்திரத்தில் யாத்திரிகர் இருக்கவேண்டியமுறைகள்.

1 தலையில்புஷ்பங்கள் தரிக்கக்கூடாது. 2 புஷ்பத்தை யாருக்கும் குடுக்கக்கூடாது. 3 கட்டில்மேல் படுக்கப்படாது 4 பாதரக்ஷை யுபயோகிக்க கூடாது. 5 கொடைபிடித்துக் கொள்ளகூடாது. 6 மாம்சமுதலானவைகளை புசிக்கக்கூடாது, 7 தூரமானஸ்திரீகள் வசிக்ககூடாது. 8 ஸ்திரீகள் பிரவிசிக்ககூடாது, 9 துர்பாஷைகள் பேசப்படாது. 10 திரிகரணசுத்தியில்லாமல் சுவாமி சந்நிதிக்கு போகக்கூடாது. 11 ஸ்ரீவராஹ சுவாமி தர்சனம் முதலில்செய்து ஸ்ரீநிவாசர் தர்சனம் செய்யவேண்டும். 12 பேடைகளின்பேரில் வசிக்கலா

காது. 13 மயக்கந்தரும் பானங்கள் செய்தலாகாது. 14 அரிசிருத்தலாகாது. 15 காரமானபதார்த்தங்களைவருக்கக்கூடாது. 16 பூமி அதிரும்படி நடத்தலாகாது. 17 பூமி இதிரும்படி எந்தகாரியமும் செய்யக்கூடாது. 18 பெருங்கூச்சலிடக்கூடாது- 19 பொய் சொல்லலாகாது. 20 ஜீவஹிம்சை செய்தலாகாது. 21 பகல் தூங்கக்கூடாது. 20ஸ் திரீபோகங்களை ஒழித்தல்வேண்டும். 23 உயிர்மரங்களை வெட்டலாகாது. 24 ஸ்வாமிநைவேத்தியத்திற்முன்பு உண்ணலாகாது. 25 புஷ்பங்களை முகரக்கூடாது. 26 கோவிலில் இராத்திரி பூஜைமுடியும் தனில் தூங்கக்கூடாது. 27 பகவானுக்கு ஸமர்பிக்காத ஒரு பொருளையும் சாப்பிடக்கூடாது. 28 புருஷனும் பத்தினியும் ஒருபடுக்கையிலிருக்கலாகாது. 29 தேர், குதிரை யானைகளின்மீது ஏறலாகாது. 30 ஸிம்ஹாசனமுதலிய உன்னத ஆசனங்களின்மேரில் உட்காரலாகாது. 31 ஸ்ரீ கபில தீர்த்தத்தில் நீராடி ஸ்ரீகபிலேஸ்வரரை தரிசித்து வணங்கியபின்தான் மலையேறவேண்டும்.

ஸ்ரீ வெங்கடேசன் காப்பு.

# ஸ்ரீ திருப்பதி தீர்த்தங்களின் விபரம்.!

தும்புருதீர்த்தம்:—தும்புரு என்கிற ஓர் கெந்தருவின் மாசிமாதத்தில் கோணதீர்த்தத்தில் ஸ்நானம்செய்து அக்கரையில் இருந்த அரசமரத்துக்கு பிரதக்ஷண நமஸ்காரங்கள் செய்துவிட்டு ஒருநாள் வீட்டுக்குப்போக பத்தினியானவள் சூர்யோதயம் ஆயும் தூங்கிக்கொண்டிருந்தமையால் கோபம்கொண்டு தினம்தோறும் தன்னுடன்கூட கோணதீர்த்தத்திற்குவந்து ஸ்நானம்செய்யும்படி கட்டளையிட்டான் அதற்கு தன்பத்தினி கெர்ப்பமுடைய என்னை காலையில் குளிர்ந்தஜலத்தில் ஸ்நானம்செய்யச்சொல்வது உங்களுக்கு என்னகடினமான உள்ளம் என்று நிந்தித்தாள். அதனால் கெந்தர்வனுக்கு கோபம்மேலிட்டு நீ தவளையாகப்போய் கோணதீர்த்தத்தின் கரையின்மீது அரசமரத்தில் குடியிருந்து அகஸ்தியமாமுனிவர் சிஷ்யர்களுடன் அவ்விடம் வந்து அந்த தீர்த்தமகிமையை தன்சிஷ்யர்களுக்கு சொல்ல அதை நீகேட்டு சுயரூபத்தை அடைவாயென்று சாபமிட்டான். சாபம் தீர்ந்தபின்பு தன்பத்தினியுடன்கூடி அந்த தீர்த்தத்தில்ஸ்நானம்செய்து ஸ்ரீவெங்கடேச பெருமாளை தியானிக்க அவர் பிரத்யக்ஷமாய் உனக்கென்ன வரம் வேணுமென்று கேட்க நித்தியம் உங்கள்சேர்வையும் இந்த தீர்த்தத்துக்கு என்பேரும் உண்டாக வேணுமென்று பிரார்த்தித்தான்.

ஆகாசகங்கை:—பரமபதத்தை அடையவிரும்பி ஒரு பிராமணன் வெங்கடாசலத்தில் எம்பெருமான் லோகோபகாரத்தின் பொருட்டு வீற்றிருக்கும் ஆகாயகங்கையில் ஸ்நானம் செய்துகொண்டு சர்வபாபவிமோசன நாமாகிய ஸ்ரீமந்நாராயணன் திருநாமத்தை ஜபித்து தவம்செய்ய ஸ்வாமி பிரத்யக்ஷமாய் அவன் மனோபாவத்தையறிந்து நீ இன்னும் சிலநாள் இந்த தீர்த்தத்தில் ஸ்நானம்செய்யவேணுமென அப்படியே யிருந்து அந்த பிராமணன் முடிவில் பரமபதமடைந்தான் அந்த தீர்த்தத்தில் சித்திரமாதம் பௌர்ணமியில் ஸ்நானம்செய்தால் நற்பலங்கள் உண்டாகும்.

பாபநாசதீர்த்தம்:—ஒரு சண்டாளன் சந்ததி அடையும்பொருட்டு ஓர் நந்தவனத்தை உண்டாக்கி தேவபிராமணர்களுக்கு புஷ்ப கைங்கரியம் செய்துக்கொண்டுவர ஓர் பிராமணன் அருளால் அஷ்டாக்ஷரமந்திரம் உபதேசம்செய்யப்பட்டு அதை ஜபித்துக்கொண்டிருந்து மறுஜன்மத்தில் பிராமணனுப்பிறந்து அகஸ்தியமாமுனி கட்

டளையின்படி ஸ்ரீதிருப்பதிக்ஷேத்திரத்துக்கு வந்து, யித்தீர்த்தத்தில்
ஸ்நானஞ் செய்து சகலபாவ விமோசன முள்ளவனாய் பரமபத
மடைந்தான்.

பாண்டவதீர்த்தம்:—பஞ்சபாண்டவர்கள் வனவாசஞ்செய்து மிக
வும் துக்கித்துக்கொண்டிருக்க திரிலோகசஞ்சாரியாகிய நாரதர்
அவ்வழியாகப்போக அவர்களைக்கண்டு நமஸ்கரித்து குறைகளைச்சொல்ல
அதற்கவர் நீங்கள் வெங்கடாசலஞ்சென்று அவ்விடத்து தீர்த்தங்களில்
ஸ்நானஞ் செய்து பரந்தாமனான வெங்கடேசப்பெருமாளை தியானித்
தால் உங்கள் கஷ்டங்கள் நீங்கிச் சுகம் உண்டாகுமென, அவ்விதமாக
வே அவர்கள் வெங்கடாசலஞ்சென்று சகல தீர்த்தங்களில் ஸ்நானஞ்
செய்து முடிவில் ஓர் தீர்த்தத்தில் நின்றிருக்க ஸ்வாமி தரிசனம்
உண்டாகி [illegible] ராஜ்ஜியபோகங்கள் அடைந்தார்கள்.

கபிலதீர்த்தம்:—பாதாளத்தில் கபிலமாமுனி பூஜித்துக்கொண்
டிருந்த சிவலிங்கம் பூமியை பிளந்துக்கொண்டு மேலுக்குவர அதை
முப்பத்துமுக்கோடி தேவர்கள் பிரதிஷ்டை செய்துவிட்டார்கள், பிற
கு கபிலமாமுனி ஞானதிருஷ்டியினால் தெரிந்து பாதாளகங்கை
யை கொண்டுவந்து அந்த லிங்கத்திற்கு அபிஷேகஞ்செய்து பூஜித்த
தால் யித்தீர்த்தம் கபில தீர்த்தமென விளங்குகிறது.

தொட்டிதீர்த்தம்:— பிரம்மஹத்தியுள்ள ஓர் பிராமணன் பரத்
வாஜமாமுனி சொன்னபடி வெங்கடாசலஞ்சென்று யித்தீர்த்தத்தில்
ஸ்நானங்கள்செய்து பாபவிமோசனம் உள்ளவனான். யித்தீர்த்தம்
எல்லாதீர்த்தங்கள் ஏகோபித்ததினால் வெகு சிரேஷ்டமானது.

குமாரதாராதீர்த்தம்;—மெலிந்த பலஹீன கிழவனான ஓர் பிரா
மணன் தன் பிள்ளையைக்காணாமல் பலதேசங்கள் தேடி வழிதப்பி
வெங்கடாசலம் வந்து பசியினாலும் தாகத்தினாலும் தன் [illegible]
பிள்ளையை நினைத்து அழுதுகொண்டிருக்க வெங்கடாசலபெருமாள்
பிரத்யக்ஷமாய் ஓர் தீர்த்தத்தைக்காட்டி அதில் ஸ்நானம் செய்யச்சொ
ல்ல அந்தபிராமணன் அப்படியே ஸ்நானம் செய்ய விருத்தாப்பியம்
போய் பாலகுமாரனைப்போல் யவ்வனரூபம் உண்டானபடியால்
குமார தீர்த்தமென விளங்குகின்றது,